பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 22 வியாழக்கிழமை 05.04.2018 கதிர் 151

## கடற்கரையில் மூதாட்டி நேற்று சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஏப்.05

வல்வெட்டித்துறைக் கடற்கரையில் வயோதிபப் பெண் ஒருவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் நேற்று மாலை மீட்கப்பட்டது என வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பக்கம் 18 >>>

## ஐ.தே.முன்னணி எம்.பிக்களுக்கு ரணில் விருந்து



ஐக்கிய தேசிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நேற்று

பக்கம் 03 >>>

ஆதரவு - 122; எதிர்ப்பு - 76; முடிவில்லை - 27

# ரணில் வெற்றி!

## நம்பிக்கையில்லாப் பிரேரணை படுதோல்வி



கொழும்பு, ஏப்ரல் 05

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக, நாடாளுமன்றத்தில் கூட்டு எதிரணியால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை 46 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.**

பக்கம் 03 >>>

## சு.க. எம்பிக்கள் 22 பேர் கூட்டிலிருந்து 'அவுட்'

கொழும்பு, ஏப்.05

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்புக்குப் பின்னர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசில் இருந்து விலக

பக்கம் 03 >>>

## 12 விடயங்கள் கூட்டமைப்புக்கு ரணில் எழுத்து மூலம் உறுதியுரை

- ★ தீர்வு முயற்சி தீவிரம் ★ அரசியல் கைதிகள் விடுவிப்பு
- ★ காணிகள், பண்ணைகள் விடுவிப்பு
- ★ காணாமற்போனோர் விவகாரத்துக்குத் தீர்வு
- ★ அந்தந்த மாவட்டங்களுக்கே வேலைவாய்ப்பு
- ★ தமிழ் பிரதேசங்களுக்கு தமிழ் அதிகாரிகள்

கொழும்பு, ஏப்.05

நம்பிக்கையில்லாப் பிரேரணை விவகாரத்தில் தமக்கு ஆதரவு அளிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விதித்த நிபந்தனைகளை ஏற்று, அவற்றைத் தாம் நிறைவு செய்வார்

பக்கம் 18 >>>

## மஹிந்தவை சபையில் சாடினார் பொன்சேகா

கொழும்பு, ஏப்.05

கடந்த ஆட்சிக் காலத்தில் தேசிய சமாதானத்தைப் பற்றிப் பேசாத முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தற்போது அதனைப் பற்றி பேசுவது விந்தையாக உள்ளதென பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம்,

பக்கம் 18 >>>

## சு.கவுக்குள் குழப்பம்

கொழும்பு, ஏப்.05

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் சு.க. பங்கேற்காது என்று நேற்றுக் காலை அறிவித்தது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுக் காலை நடந்த கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

ஆனாலும், நேற்றைய வாக்கெடுப்பில் சு.க. எம்.பிக்கள் சிலர்

பக்கம் 18 >>>

## கைவிடப்பட்டுள்ள கடற்படை முகாமில் வெடிபொருள்கள்

மன்னார், ஏப்.05

பேசாலை – நடுக்குடா பகுதியில் கைவிடப்பட்ட கடற்படை முகாமில் இருந்து வெடிபொருள்களைத் தலைமன்னார்

பக்கம் 18 >>>

## நாடு அழிவை நோக்கிச் செல்ல ஆதரவளிக்காது கூட்டமைப்பு!

### நாடாளுமன்றில் சுமந்திரன் எம்.பி.



கொழும்பு, ஏப்.05

நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்ல முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் ஆதரவளிக்காது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பிரதமர் ரணில் விக்

பக்கம் 18 >>>

## தமிழ்க் கூட்டமைப்பு ரணிலுக்கே ஆதரவு!

### சபையில் சம்பந்தன் அறிவிப்பு

கொழும்பு, ஏப்.05

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரவளிக்

பக்கம் 03 >>>

## 25 பரா குண்டுகள் முல்லையில் மீட்பு



முல்லைத்தீவு, ஏப்.05

முல்லைத்தீவு – கேப்பாபிலவுப் பகுதியில் படையினர்வசம் இருந்து இந்த ஆண்டு ஆரம்பத்தில் விடுவிக்கப்பட்ட காணிக்

பக்கம் 18 >>>

## வலி. கிழக்கில் கூட்டமைப்புக்கு ஈ.பி.டி.பி., சு.க. கைகொடுத்தன!



### தலைவரானார் நிரோஸ்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்.05

ஈ.பி.டி.பி., சுதந்திரக்கட்சி ஆகியவற்றின் உதவியால் வலி. கிழக்குப் பிரதேச சபையின் ஆட்சியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியது.

பக்கம் 03 >>>

## நல்லூர் பிரதேச சபையில் கூட்டமைப்பின் தலைமை



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்.05

நல்லூர் பிரதேச சபையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியது. அதன் தலைவராக த.தியாகமூர்த்தி பெறுப்பேற்றார்.

பக்கம் 18 >>>

## வீரவன்ஸ மகிழ்ச்சி



கொழும்பு, ஏப்.05

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்புத் தொடர்பில், ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும்

பக்கம் 18 >>>

## மீண்டும் அதே இடத்தில் திலீபனின் நினைவுத் தூபி

### மாநகர முதல்வர் உள்ளிட்ட குழு நேரில் ஆராய்வு




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்.05

நல்லூர் கந்தசுவாமி ஆலயச் சூழலுடன் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியை முன்னர் இருந்தவாறே

பக்கம் 03 >>>

## ரயிலுடன் மோதுண்டு 17 வயது மாணவன் பலி!

### வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஏப்.05

வவுனியா – தேக்கவத்தைப் பகுதியில் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் ரயிலில் மோதுண்டு

பக்கம் 18 >>>

### இனி அது ரகசியம் அல்ல!

நேற்று இந்தப் பத்தியில் கூட்டமைப்பு உள் விவகாரங்களை எழுதியமையினால் கூட்டமைப்பு வட்டாரங்களில் இப்போது வில்லனாக்கப்படும் வில்லங்கத்தில் மாட்டிக் கொண்டு விட்டேன்.

பக்கம் 03 >>>

காலைக்கதிர் Kalaikkathir



# நம்பிக்கையில்லாப் பிரேரணையில் இங்கு பேசுவது மனச்சாட்சியல்ல; பணச்சாட்சி!

## அரசின் ஆடைகளைக் களைந்து விட்டோம் என்கிறார் விமல்



கொழும்பு, ஏப். 05

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்ததன் மூலம் கூட்டு எதிர்க்கட்சியினர் அரசின் ஆடைகளைக் களைந்துள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் நேற்றுக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் நாங்கள் அரச அமைச்சர்களின் ஆடைகளைக் களைந்துள்ளோம்.

இன்று (நேற்று) இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பேன் என லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன கூறியுள்ளார். அரசில் அங்கம் வகிக்கும் 22 பேர் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் அரசின் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை நாங்கள் உடைப்போம்.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராகப் பணமே பேசுகிறது. மனச்சாட்சியல்ல. பணச்சாட்சியே பேசுகிறது எனவும் விமல் வீரவன்ஸ குறிப்பிட் டுள்ளார்.

விமல் வீரவன்ஸ உரையாற்றும் போது ஆளும் கட்சி தரப்பில் இருந்து கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. ஆளும் கட்சியினரின் தடைகளுக்கு மத்தியில் வீரவன்ஸ தனது உரையை தொடர்ந்தார்.

## 2020 இல் நிலக்கண்ணி வெடிகள் அற்ற நாடாக மாறும் இலங்கை!




கொழும்பு, ஏப். 05

இலங்கையை நிலக்கண்ணி வெடிகள் அற்ற நாடாக மாற்றுவதற்கான ஒத்துழைப்பு வழங்கப்படும் என பிரித்தானியத் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான பிரித்தானியாவின் பிரதித் தூதுவர் தொம்போர்ன் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் எதிர்வரும் 2019ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்குள் இலங்கையில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்காக பிரித்தானிய அரசு 120 கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

அத்துடன், கடந்த ஆண்டு இலங்கை, ஒட்டாவா சாசனத்தை ஏற்றுக் கொண்டிருப்பதன் ஊடாக, 2020ஆம் ஆண்டுக்குள் நிலக்கண்ணி வெடிகள் இல்லாத நாடாக மாறும் இலக்கை இலங்கை இலகுபடுத்தியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஐ.நாவில் அரசுக்கு எதிராக மற்றுமொரு முறைப்பாடு!



கொழும்பு, ஏப். 05

சர்வதேச தொழிலாளர்தினம் மாற்றப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐ.நா. தொழிலாளர் காரியாலயத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தால் நேற்றுமுன்தினம் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

விசாக பூரணை வாரத்தை முன்னிட்டு, பௌத்த மகாசங்கத்தினர் விடுத்த கோரிக்கைக்கு அமைய, சர்வதேச தொழிலாளர் தினத்தை மே மாதம் 7ஆம் திகதி கொண்டாட அரசு தீர்மானித்துள்ளது.

இந்த விடயமானது தொழிலாளர்களின் உரிமைகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது எனத் தெரிவித்து ஆசிரியர் சங்கம் முறைப்பாடு செய்துள்ளது.

## கிண்டலடித்துச் சிரித்துக்கொண்டு நாடாளுமன்றில் நடமாடிய பிரதமர்



நம்பிக்கையில்லாப் பிரேரணையை நேற்றுசபையில் முன்வைத்து தினேஷ் குணவர்தன உரையாற்றிக் கொண்டிருந்த போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சகஜமான முறையில் சிரித்தவாறு கலந்துரையாடிக் கொண்டிருந்தாராம்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்குச் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது.

இதன்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைத்து தினேஷ் குணவர்தன உரையாற்றிக் கொண்டிருந்தபோது பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க சபாபீடத் திற்குள் நுழைந்து ஐக்கிய தேசியக் கட்சி நாடாளு மன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் இருந்தார்.

இதனையடுத்து தனது ஆசனத்தில் வந்து அமர்ந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவுமான அநுர குமார திஸாநாயக்கவைப் பார்த்துக் கிண்டலாக ஏதே கூறினார்.

அதனையடுத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணா நாயக்க, அமைச்சர்களான லக்ஸ்மன் கிரியெல்ல, கயந்த கருணாதிலக ஆகியோருடன்சிரித்துக்கொண்டு பேசிக் கொண்டிருந்தார்.

அதன்பின்னர் பிரதமர் எழுந்து சென்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் அமைச்சர்களுடனும் ஆசனம் ஆசனமாகச் சென்று பேசிக் கொண்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது என நாடாளுமன்ற ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர்.

## நம்பிக்கையில்லாப் பிரேரணை காற்றுப்போனது என்கிறார் ஹக்கீம்

கொழும்பு, ஏப். 05

தன்னுடைய நாடாளுமன்ற வரலாற்றில் எத்தனையோ நம்பிக்கையில்லாப் பிரேரணைகளைப் பார்த்துள்ளேன். ஆனால், ஆரம்பிக்கும் போதே காற்றுப்போன நம்பிக்கையில்லாப் பிரேரணையை இப்போதே பாக்கிறேன்என அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை, அரசை இலக்காகக் கொண்டது. மஹிந்த இதில் கையெழுத்திடவில்லை. அத்துடன், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் 3 குழுக்கள் செயற்படுகின்றன போல் தெரிகின்றது. இதில் ராஜபக்‌ஷக்கள் நீண்ட பயணத்தை இலக்காகக் கொண்டு செயற்படுகின்றமையைக் காணமுடிகிறது - என்றும் அவர் குறிப்பிட்டார். (க)

# ரணிலுக்கு ஆதரவு வேண்டி ஹற்றனில் விசேட பூஜை!





கொழும்பு, ஏப். 05

பிரதமருக்கு எதிராகக் கூட்டு எதிர்க்கட்சியினர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற வேண்டும் என விசேட பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஹற்றன் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் நேற்றைய தினம் இந்த விசேட பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நம்பிக்கையில்லா பிரேரணை தோற்கடிக்கப்பட்டு ரணில் விக்கிரமசிங்க வெற்றியடைய வேண்டும் என முன்னெடுக்கப்பட்ட இந்த வழிபாட்டில் ஹற்றன், டிக்கோயா நகரசபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டுள்ளனர்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பு எம்.பிக்கள் கூட்டத்தில் பங்கு பற்றிய எம்.பி. ஒருவருடன் நேற்று மாலை பேசினேன்.

*“எங்கள் கூட்டத்தில் இன்று நீங்களும் பேசுபொருள். நேரில் வந்தீர்களானால் பிடித்துத்தின்று விடுவார்கள், ‘கூட்டமைப்பு நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் வெளியே – ஊடகங்களுக்கு – கசிய விடப்படக் கூடாத செய்தி என்ற பீடிகையோடு கூறப்பட்ட தகவல்’ – என்று குறிப்பிட்டு, அவ்வளவையும் பிரசுரித்திருக்கின்றீர்கள். அப்படிக் குறிப்பிட்டு அதனைப் பிரசுரிப்பது உங்கள் திமிர் வேலைதானே?”* – என்றார் அவர்.

*“இல்லை ஐயா. அது எங்கள் வேலை. மறைவில் நடப்பதை அம்பலப்படுத்துவதுதானே பத்திரிகையாளன் பணி. அது உங்களுக்கு இடைஞ்சலாக இருந்தால் மன்னியுங்கள்!”* – என்றேன் மிக அடக்கமாக.

*“உந்தப் பவ்வியத்தைக் காட்டித் தானே செய்திகளைப் பிடுங்கிக் கொண்டு விடுகிறீர்கள். கடைசியில் நாங்களும் அல்லவா சும்மா மாட்டிக் கொள்ளுகின்றோம்!”* – என்றார் அவர்.

“மனுஷன் ‘அலேர்ட்’ ஆகிவிட்டார். இனி செய்தி தரமாட்டார்!” – என்பது தெரிந்தது.

இனிமேல், இன்று, வேறு மூலத்தைத்தான் செய்திக்குத் தேட வேண்டும் என்று தோன்றியது.

இன்னொரு எம்.பிக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்தேன். அவர் மன்னார்க்காரர். அவரும் சீறினார்.

*“நேற்றும் ‘கோல்’ எடுத்தீர்கள். நான் உங்களுடன் பேசவேயில்லை. ஆனால் என் தலை அல்லவா இங்கு உருளுகின்றது?”* – என்றார் அவர்.

என்ன விடயம் என்று விசாரித்தேன். நேற்று நான் தொலைபேசி அழைப்பு எடுத்தபோது அந்த எம்.பியின் தொலைபேசியில் எனது இலக்கமும், அவர் பதிவு செய்திருந்த எனது பெயரும் தோன்றியிருக்கின்றன. எனக்குப் பதில் அளிக்காமல் பக்கத்தில் இருந்த இன்னொரு எம்.பிக்கு அதைக் காட்டியிருக்கின்றார் அவர்.

*“உங்கடை ஆள் பக்கத்தில் இருந்தார். அவருக்கு நீங்கள் அழைக்கின்றீர்கள் என்பதைத் தொலைபேசியில் காட்டினேன். அவ்வளவுதான். அந்த ஆள் என்னடாவென்றால் இன்று காலையில் அதைப் போய் ஐயாவிடமும் அவர் தளபதியிடமும் போட்டுக் கொடுத்துவிட்டார். இந்த எம்.பிக்குத்தான் அந்தப் பத்திரிகைக்காரர் நேற்றுக் ‘கோல்’ எடுத்தவர், அவர்தான் எல்லாவற்றையும் போட்டுக் கொடுத்திருப்பார்”* – என என் மீது இருந்த காழ்ப்புணர்வை இந்த எம்.பி. மீது கொட்டித் தீர்த்திருக்கின்றார் போலும் ‘என்னுடைய ஆள்’ என்று கூறப்படுகின்ற மற்ற எம்.பி.

எனக்கு மன்னார்காரரை யோசிக்கப் பாவமாக இருந்தது. இனி வேறு பக்கம் தேடலாம் என்று திசையை மாற்றினேன். வேறு தரப்புக்குள்ளிலிருந்து சில தகவல்களை பிடுங்கி எடுக்க முடிந்தது.

★ ★ ★ ★

நேற்று மதியம். நாடாளுமன்றக் ‘கன்ரீன்’. சம்பந்தன், மாவை சேனாதிராசா, சுமந்திரன், ஹக்கீம் போன்றோர் ஒரு மேசையிலிருந்து உணவு அருந்திக் கொண்டிருந்தனர்.

உள்நுழையும் வாசலை ஒட்டி அமைச்சர்கள் மனோ கணேசனுடன், கூட்டமைப்பு எம்.பிக்களான ஶ்ரீதரனும், சாள்ஸ் நிமலநாதனும் பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது முன்னாள் ஜனாதிபதியும் இப்போதைய எம்.பியுமான மஹிந்த ராஜபக்ஷ அங்கு வந்தார்.

*“அப்ப... நீங்கள் ரணிலைக் காப்பாற்ற இன்று வாக்களிக்கப் போகின்றீர்களா?”* – என்று மனோ கணேசனைப் பார்த்துக் கேட்டார் மஹிந்தர்.

“ஆம். எங்களுக்கு வேறு *மார்க்கமில்லை.”* – என்று விளங்கப்படுத்தினார் மனோ.

*“இவர்கள் என்ன செய்யப் போகின்றார்களாம்?”* – என்று சிறிதரனையும், சாள்ஸ் நிமலநாதனையும் பார்த்துக் கேட்டார்.

*“இவர்களும் ரணிலுக்கு ஆதரவாகத்தானே வாக்களிப்பார்கள்?”* – என்று ஏளனத்துடன் கேட்டார் மஹிந்தார்.

*“அப்படி இல்லை. நீங்கள் வடக்கு – கிழக்கு இணைப்பை உறுதிப்படுத்தும் தீர்வு ஒன்றைத் தருவோம் என இங்கு இப்போதே வாக்குறுதி தாருங்கள். நாங்கள் அனைவரும் இப்போதே முடிவு எடுத்து ரணிலைக் கவிழ்த்துக் காட்டுகிறோம்.”* – என்று சடாரெனப் பதில் தந்தார் ஶ்ரீதரன். அவரது கருத்தை சிங்களத்தில் மொழிபெயர்த்து மஹிந்தவிடம் கூறினார் அமைச்சர் மனோ. அதைக் கேட்டதும் சடாரென முகத்தைத் திருப்பிக் கொண்டு அங்கிருந்து மாறினார் மஹிந்தர்.

★ ★ ★ ★

நேற்று மாலை 7 மணியளவில் நடைபெற்ற கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் வலு சூடாக இருந்தது.

பேசு பொருளாக ‘காலைக் கதிர்’ இதழ் அமைந்தது.

*‘ரணில்தான் வேண்டும்; சம்பந்தன் விடாப்பிடி’* – என்று காலைக்கதிர் இன்று தலைப்புச் செய்தி போட்டிருக்கின்றது என்பதை உரத்த குரலில் சத்தமாக – சம்பந்தனுக்குக் கேட்கக் கூடியதாக – இரண்டு, மூன்று தடவை திரும்பத் திரும்பக் கூறினார் சுமந்திரன்.

‘ஈ.பி.டி.பியிடம் கூட்டமைப்பு மண்டியிட்டது’ என்றெல்லாம் எழுதுகின்றது எனவும் அவர் சீறினார்.

அந்தக் கருத்தை மாவை சேனாதிராசாவும் வெளிப்படுத்தினார்.

எல்லாவற்றையும் செவிமடுத்த சம்பந்தன், *“அது எந்தப் பேப்பர்?”* – என்று கடைசியாக ஒரு கேள்வியைக் கேட்டார்.

*“காலைக்கதிர்”* என்றார் சுமந்திரன்.

*“அப்படியா?”* என்ற கேள்வியோடு ஓர் ஏளனச் சிரிப்புச் சிரித்தார் சம்பந்தன்.

*“ஐயா சிரித்த நக்கல் சிரிப்பைப் பார்த்தால் ‘அது என்ரை பேப்பர். நீங்கள் சும்மா விடுங்கோ!’ – என்ற மாதிரி இருந்தது”* – என என்னிடம் பிறகு குறிப்பிட்டார் பிறிதொரு கூட்டமைப்பு எம்.பி.

நேற்று மாலை நடைபெற்ற கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பிரதமர் ரணிலை ஆதரிப்பது என்ற முடிவு அதிக சர்ச்சையின்றியே எட்டப்பட்டது.

ஆனால் வேறு ஒரு விடயம் அங்கு காரசாரமாகி விஸ்வரூபம் எடுத்தது.

வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் நிர்வாகத்தைப் பிடிப்பதற்காக ஈ.பி.டி.பியின் ஆதரவைக் கேட்டமை முழுத் தவறு என்று ஶ்ரீதரன் எம்.பியும், சரவணபவன் எம்.பியும் சீறுப் பாய்ந்தனர். குரலை உயர்த்திப் பேசினர்.

*“இங்கு, போன நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஈ.பி.டி.பியின் ஆதரவைப் பெறுவதில்லை என்று முடிவு செய்யப்பட்டது. சம்பந்தன் ஐயா அதனைத் தெளிவாகச் சொன்னார். ‘கஜேந்திரகுமார் போக்கிரி என்றால் டக்ளஸ் படுபோக்கிரி’ என்றும், ‘தப்பிலித்தனம் செய்பவர்’ என்றும் மோசமாக விமர்சித்தார். அவருடன் எந்தத் தொடுசலும் வேண்டாம் என்று சம்பந்தன் ஐயா இங்கு தெளிவாகவே கூறிவிட்டுச் சென்றார்.*

*“அதன் பிறகு டக்ளஸுடன் மாவை அண்ணன் பேசியிருக்கின்றார், சுமந்திரன் பேசியிருக்கின்றார். யாரைக் கேட்டு இந்த முடிவை எடுத்தீர்கள்?, எப்படி டக்ளஸிடம் நீங்கள் ஆதரவு கேட்க முடியும்? அது என்ன வகையில் நியாயம்?”* – என்றெல்லாம் சத்தமிட்டார் ஶ்ரீதரன்.

சரா எம்.பியும் வழமைக்கு மாறாகத் தமது குரலை உயர்த்தி, உரத்துப் பேசினார். டக்ளஸின் ஆதரவைப் பெற்று, நிர்வாகம் அமைப்பது கேவலம் என்றார் அவர்.

*“டக்ளஸிடம் ஆதரவு கேட்கவில்லை, விடயத்தைச் சொன்னோம்”* – என்ற சாரப்பட தமது செயற்பாட்டை நியாயப்படுத்த முயன்ற சுமந்திரன் மீதும் சீறி விழுந்தார் ஶ்ரீதரன்.

*“நீங்கள் ஜெனீவாவில் இருந்தீங்கள். உங்களுக்கு நடந்த விடயங்கள் தெரியாது.”* – என்றார் சுமந்திரன்.

*“சிவில் ‘சொஸைட்டி’ சொன்னார்கள், மத அமைப்புகள் சொன்னார்கள் என்றெல்லாம் இங்கு சமாளிப்புத் தேவையில்லை. அவர்கள் கூறியவற்றை நீங்கள் ஏன் டக்ளஸுக்குக் கூறவேண்டும்? விருப்பம் என்றால் அந்த நியாயங்களை அவர்களே டக்ளஸிடம் கூறுவதுதானே? எது, எப்படிச் சொன்னாலும் நீங்கள் டக்ளஸுடன் பேசியமை தவறு. அந்த வேலை கிளிநொச்சியில் நடக்காது; நடக்க விடமாட்டேன். டக்ளஸின் ஈ.பி.டி.பியோடோ சந்திரகுமாரின் சுயேச்சை உறுப்பினர்களுடனோ சேர்ந்து செயற்படுவோம் என்ற பேச்சு கிளிநொச்சியில் நடக்கவே நடக்காது.”* – என்று அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டார் ஶ்ரீதரன்.

கிளிநொச்சியிலும் மாந்தை கிழக்கிலும் பிரதேச சபை நிர்வாகங்களைக் கைப்பற்றுவதற்குள்ள திட்டங்களை ஶ்ரீதரன் விவரித்தார்.

மாவை சேனாதிராசாவும் தம் பங்குக்குத் தான் டக்ளஸுடன் பேசியமைக்கான நியாயங்களை எடுத்துரைத்தார்.

*“சித்தார்த்தன் ஏற்கனவே டக்ளஸுடன் பேசி வருபவர். நாங்கள் தம்முடன் பேசவில்லை என்பதை டக்ளஸ் குறையாகக் கருதுகின்றார் என்ற சாரப்பட சித்தார்த்தன் சொன்னார். ஆகையினால் அவருக்கு அழைப்பு எடுத்து நிலைமையை விளங்கப்படுத்தினேன். அவ்வளவே. நான் ஆதரவு கேட்கவில்லை.”* – என்றார் மாவை சேனாதிராசா.

ஆக, ஈ.பி.டி.பியிடம் கூட்டமைப்போ, இலங்கைத் தமிழரசோ ஆதரவு கேட்கவே இல்லை என்ற மாதிரியும் –

ஆதரவு கேட்ட மாதிரியான மாயையை யாழ்ப்பாணப் பத்திரிகைகளும், ஈ.பி.டி.பி. பிரமுகர்களும்தான் பரவவிட்டார்கள் என்ற நிலைப்பாடுமே – நேற்றைய கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பெரிதும் பிரதிபலித்தது.

எது, எப்படி என்றாலும் யாழ்ப்பாண மக்கள் அப்படி ஒன்றும் விடயம் அறியாதவர்கள் அல்லர். யார், யாரை ஆதரித்தார்கள், எவர் ஆதரவு கேட்டார்கள், எவர் ஆதரவு கேட்காமல் அதைக் கொடுத்தார்கள் என்பவை எல்லாம் அவர்களுக்கு நன்கு தெரியும். அதை அரசியல்வாதிகள் புரிந்து கொள்வது நல்லது.

**- மின்னல் -**

## ஐ.தே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேநீர் விருந்தளித்தார் என பிரதமர் ஊடகப் பிரிவு இரவு ஒளிப்படங்களை வெளியிட்டது.

நாடாளுமன்றிலுள்ள பிரதமரின் அலுவலகத்திலேயே இந்தத் தேநீர் விருந்தளிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்போவதில்லை எனத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அறிவித்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் நேற்று நாடாளுமன்றத்தில் இதனை அறிவித் தார்.

தேசிய அரசுக்குத் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஆணையை மக்கள் வழங்கினர். ஆகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்த ஆணையை நிறைவேற்றவேண்டும் என்ற அழுத்தத்தைக் கொடுக்கும் .

கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணைக்கு எதிரான செயற்பாடே, பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை.

மேலும், நாட்டில் நீடித்துள்ள பிரச்சினைக்குத் தீர்வுகாண புதிய அரசியல் யாப்பை உருவாக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன. அதனை தோற்கடிப்பதற்கான முயற்சியாகவும் இப்பிரேரணை அமைகிறது.

2015ஆம் ஆண்டு தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணைக்கு எதிராக வாக்களிக்க வேண்டாம் என நாடாளுமன் றைக் கேட்டுக் கொள்கின்றேன்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்ட காலமும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களும் இந்தப் பிரேரணை அரசியல் நோக்கம் கொண்டது என்பதை வெளிப்படுத்தியுள்ளது. – என்றார். (ஐ)

## சு.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ளனர்.

அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இந்தத் தகவலைப் பிரதமருக்கு தெரியப்படுத்தியுள்ளார் என அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

நிமல் சிறிபால டி சில்வா, சுசில் பிரேம ஜயந்த, அனுர பிரியதர்சன யாப்பா உள்ளிட்டவர்கள் அரசை விட்டு வெளி யேறவுள்ளனர் என, ஐக்கிய மக் கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஸ் பத்திரன தெரிவித்தார். (ஐ)

## வலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் தெரிவுக்கான முதல் அமர்வு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நேற்று மாலை நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் தியாகராஜா நிரோஷும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி சார்பில் சிறிகுமரனும் தலைவர் பதவிக்காக பிரேரிக்கப்பட்டனர். பகிரங்க வாக்கெடுப்பு இடம் பெற்றது.

இந்நிலையில் 38 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 15 உறுப்பினர்களும், ஈ.பி.டி.பியின் 06 உறுப்பினர்களும், ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 03 உறுப்பினர்களுமாக 24 உறுப்பினர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரான தியாகராசா நிரோஸுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 06 உறுப்பினர்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பிரேரித்திருந்த சண்முகராஜா ஶ்ரீகுமரனுக்கு வாக்களித்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் 03 உறுப்பினர்களும் சுயேச்சைக் குழுவின் 04 உறுப்பினர்களும் நடுநிலை வகித்தனர். ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான சி.நவபாலன் சபை அமர்வில் கலந்து கொள்ளவில்லை.

தொடர்ந்து நடைபெற்ற உப தவிசாளர் தெரிவின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான ம.கபிலன் உப தவிசாளராக போட்டியின்றித் தெரிவானார். (ஐ-7)

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பது தொடர்பாக யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இ.ஆனோல்ட் மற்றும் மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன் உள்ளிட்டோர் நேற்று நேரில் ஆராய்ந்தனர்.

தூபி அரச படைகளால் அழிக்கப்பட்டது. அதனை மீளவும் அதே வடிவில் சீரமைப்பது தொடர்பிலேயே நேற்று ஆராயப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் இ.ஆனோல்ட், உறுப்பினர்கள் ந.லோகதயாளன் , தர்சானந் ஆகியோருடன் மாநகர ஆணையாளர் , பொறியியலாளர் உள்ளிட்ட குழுவினர் நேரில் ஆராய்ந்தனர்.

பழைய வடிவில் 23 அடி உயரத்தில் அனைவரும் புனிதம் பேணும் வகையில் தியாக தீபம் திலீபனின் தூபி அமைக்கப்படும் என யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் இ.ஆனோல்ட் தெரிவித்தார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் திலீபனின் நினைவு வாரத்தில் புதிய தூபியைத் திறக்கும் வகையில் பணிகளை முன் னெடுக்குமாறு அதிகாரிகளிடம் முதல்வர் கேட்டுக்கொண்டார். (ஐ-7)

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்கெடுப்பில், நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக 122 வாக்குகளும், ஆதரவாக 76 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 27 உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

இதனையடுத்து பெரு வெற்றி பெற்ற ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியில் நீடிப்பார் எனத் தெரியவந்தது.

நேற்றுக் காலை 9 மணி தொடக்கம், நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது நடத்தப்பட்ட விவாதத்தை அடுத்து, இரவு 9.30 மணியளவில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

சிவசக்தி ஆனந்தன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர்.

பிரேரணையில் கையொப்பமிடாத நாடாளுமன்ற உறுப்பினர்களான மஹிந்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ இருவரும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் எதிர்த்து வாக்களித்தனர். ஆறுமுகன் தொண்டமான், முத்து சிவலிங்கம், அத்துரலியே ரத்ன தேரர் மற்றும் சுதந் திரக் கட்சியைச் சேர்ந்த பலரும் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

பிரேரணையை ஆதரித்து வாக்களிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட விஜேதாச ராஜபக்ஷ எதிர்த்து வாக்களித்தார். ஜே.வி.பி. பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிட்ட சுதந்திரக் கட்சி அமைச்சர் நிசாந்த முத்துகெட்டிகம மற்றும் காதர் மஸ்தான் ஆகியோர் வாக்களிப்பு வேளை சபையில் இல்லை.

சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் மஹிந்த அமரவீர, நிமால் சிறிபால டி சில்வா, துமிந்த திசாநாயக்க, மஹிந்த சமரசிங்க, விஜயமுனி சொய்சா, ரஞ்சித் சியம்பலப்பிட்டிய, பௌசி, பியசேன கமகே, எம்.எல். குரே, சிறியானி விக்கிரமரட்ண மற்றும் சரத் அமுனுகம ஆகியோர் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவும் வாக்கெடுப்பு நேரம் சபையில் இல்லை.

சபாநாயகர் கரு ஜயசூரிய சம்பிரதாய முறைப்படி வாக்களிக்கவில்லை. பிரதிச் சபாநாயகரும் சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினருமான திலங்க சுமதிபால நடுநிலை வகித்து வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## இப்போதாவது சாத்தியமான எழுத்துமூல உடன்படிக்கை

**ஆங்கிலத்தில் ஒரு முதுமொழிச் சொற்றொடர் உண்டு.** 'Better late than never' **- எப்போதுமே கிடைக்காமல் இருப்பதை விட தாமதமாகவேனும் கிடைப்பது மேலானது என இதற்குப் பொருள் கொள்ளலாம்.**

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் சில விடயங்கள் குறித்து எழுத்தில் உறுதிமொழி பெறும் முயற்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சாதகமான நிலையைக் கண்டிருக்கிறது என நேற்று முற்பகல் வெளியான செய்தி ஒன்றை எண்ணும் போது இந்தச் சொற்றொடர்தான் நினைவுக்கு வந்தது.**

**இந்தப் பத்தி எழுதப்படும் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தப்பிப் பிழைப்பாரா என்பது உறுதியில்லாத நிலைமை காணப்பட்டது. ஆனால், இது வாசிக்கப்படும்போது அவ்விவகாரத்துக்கு ஒரு முடிவு கட்டப்பட்டிருக்கும் என எதிர்பார்க்க முடியும்.**

**தம்முடைய பதவிக்கு இக்கட்டு வந்து அல்லாடிக் கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை, அந்தப் பதவியில் தக்கவைப்பதற்கு ஆதரவு தருவதற்குக் கூட்டமைப்பு சில நிபந்தனைகளை விதித்திருப்பதாகக் கூறப்படுகிறது.**

**அரசியல் கைதிகள் விடுவிப்பு, பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கம், காணிகள் - நிலங்கள் விடுவிப்பு, வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் போன்றவை தொடர்பில், பல கோரிக்கைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரில் முன்வைத்தனர் என்றும் -**

**அவற்றைக் கூட்டமைப்பினரின் எதிர்பார்ப்புக்கு - நம்பிக்கைக்கு - அமையத் தாம் தீர்த்து வைப்பார் என்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் எழுத்துமூல ஆவணம் ஒன்றைப் பிரதமர் கூட்டமைப்புத் தரப்புக்குக் கையளித்திருக்கின்றார் என்றும் அறிய வந்தது.**

**நல்ல விடயங்கள் இவை. இதனை இப்போதாவது - இந்த அருமையான சந்தர்ப்பத்திலாவது - கூட்டமைப்பு செய்ய முற்பட்டிருக்கின்றமை** 'Better late than never' **என்ற முதுமொழியை நினைவூட்டுகிறது.**

**மைத்திரி - ரணில் தரப்பு இணைந்து மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிப்பீடத்தைத் தோற்கடித்து, வீட்டுக்கு அனுப்ப முயற்சி எடுத்த போது, அதில் கூட்டமைப்பும் இணைந்து கொண்டு காத்திரமாகப் பங்காற்றியது.**

**அச்சமயமே இத்தகைய எழுத்துமூல உறுதிப்பாட்டைக் கூட்டமைப்பு, பிற்காலத்தில் நாட்டின் இரண்டு பெரும் தலைவர்களாக - ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் வரவிருந்த தலைவர்களான - ரணில் விக்கிரமசிங்கவுடனும் மைத்திரிபால சிறிசேனவுடனும் சேர்ந்து செய்திருக்க வேண்டும் என ஆரம்பம் தொட்டே வலியுறுத்தப்பட்டு வந்தது.**

**கூட்டமைப்புத் தலைவர்களுடன் முரண்பட்டு நின்ற பேராசிரியர் சிற்றம்பலத்தில் தொடங்கி, சுரேஷ் பிறேமச்சந்திரன், தமிழரசு இளைஞர் அணித் தலைவராக இருந்த சிவகரன் வரை பலரும் இதனையே வலியுறுத்தி வந்தனர். கூட்டமைப்புக்கு வெளியில் இருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூட இதனைத் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டி வந்தார்.**

**அவர்கள் குறைசொன்ன இந்த விடயம் நிஜமாகி வருகின்றது என்பதைச் சுட்டிக்காட்டி, இறுதியில் கூட்டமைப்பு 'அணிலை மரம் ஏற விட்ட நாய்' போன்று பார்த்திருக்க வேண்டியதுதான் என இப்பத்தியில் நாமும் விமர்சித்திருந்தோம்.**

**இந்தக் கட்டத்திலாவது அந்த விடயத்தைத் திருத்திக்கொள்ளக் கூட்டமைப்பு முன்வந்திருப்பது மிக நல்ல சகுனமே.**

**தொடர்ந்தும் ரணில்தான் பிரதமர் என்றாலும், இப்போது தமிழ்க் கூட்டமைப்புக்கு எழுத்தில் கொடுத்த விடயங்களை நிறைவு செய்யும் அதிகாரம் - வல்லமை - தொடரும் அரசில் அவருக்கு இருக்குமா என்பதும் கேள்விக்குறியே.**

**குறிப்பாக தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுக்குப் புனர்வாழ்வுடன் விடுதலை அளித்தல் என்ற வாக்குறுதி பிரதமராலோ அல்லது அவரது அரசாலோ தனித்து எடுக்கக்கூடியது எனக் கருத முடியாது. ஜனாதிபதியின் இணக்கமும் பங்களிப்புமின்றி இந்த விடயத்தில் முன்னகர்வு காண்பது மிகக் கஷ்டம்.**

**அது போன்றதே காணி விடுவிப்பும். இராணுவத்தினர் வசம் இருக்கும் காணிகளை நாட்டின் முப்படைகளின் தளகர்த்தரான ஜனாதிபதியின் இணக்கமும் பங்களிப்புமின்றி விடுவிப்பது என்பது துர்லபமே.**

**ஜனாதிபதியுடனும், பிரதமருடனும் சேர்ந்து உடன்பாடு காணப்பட வேண்டிய விடயங்களும் இவற்றுள் அடங்குகின்றன. பிரதமருடன் மட்டுமான உடன்பாட்டை - எழுத்து மூல இணக்கத்தை - வைத்துக்கொண்டு இவற்றை ஒப்பேற்றுவது எங்ஙனம் என்பது மிகப்பெரும் கேள்விக்குறியே.**

**ஒன்றுமில்லாத நிலையில் இந்தச் சந்தர்ப்பத்திலாவது - மிகப் பிந்தியாவது - பிரதமருடனாவது - இத்தகைய எழுத்துமூல உடன்பாடு எட்டப்பட்டமை வரவேற்கத்தக்கதுதான்.**

**இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசிடம் எழுத்துமூலம் ஏதேனும் உறுதிமொழியைப் பெற்று விடவேண்டும் என வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் கூறிய ஆலோசனை செயற்படுத்தப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.**

# நம்பிக்கையில்லாப் பிரேரணை வந்துள்ளமை பொருத்தமே என்கிறார் பிமல் ரத்நாயக்க



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்துள்ளமை பொருத்தமே என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு வரும் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக எமது நிலைப்பாட்டை நாங்கள் முன்கூட்டியே கூறிவிட்டோம்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளமை பொருத்தமானது.

ஊழல்வாதிகளைப் பாதுகாக்குமாறு கூறி, கோப் குழுவில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெரும் தொல்லைகளைக் கொடுத்தனர்.

இதனால், நாங்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்போம் என பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# கையெழுத்திட்டவர்களும் நாடாளுமன்றத்தில் இல்லை

### அமைச்சர் நவீன் திஸாநாயக்க

கொழும்பு, ஏப். 05

கூட்டு எதிர்க்கட்சியினர் கொண்டுவந்துள்ள பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையெழுத்திட்ட சிலர் நாடாளுமன்றத்திற்குச் சமுகமளிக்கவில்லை என அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

வழக்குகளில் சிக்கியுள்ள சிலர் தலையிட்டு இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்துள்ளனர்.

தாம் எதிர்நோக்கும் குற்றச்சாட்டுக்களுக்குத் தீர்வாக அவர்கள் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை கருதுகின்றனர். இதன் மூலம் வேறு விளையாட்டை ஆட அவர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

காலையில் இருந்த பீதி எமக்கு தற்போது இல்லை. தோற்கடிப்பதில் எமக்குச் சவால் இல்லை. கையெழுத்திட்டவர்கள் கூட நாடாளுமன்றத்தில் இல்லை. கையளித்ததலைவரும் இல்லை.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிப்போர் அரசில் இருக்க முடியாது என்பதை நினைவூட்ட வேண்டும். முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் கேலிக்குரியன.

அர்ஜுன் மகேந்திரன் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கக்கூடிய அனைத்துத் தகுதிகளையும் கொண் டிருந்தார். – எனவும் அமைச்சர் நவீன் திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

(கு)

# பிரேரணையில் கையொப்பமிட்டவர்கள் கொலைகாரர்களும் கடத்தல்காரர்களுமே!

### அமைச்சர் கபீர் ஹாசீம் சபையில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 05

பிரதமருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிட்டவர்கள் கொலைகாரர்களும் கடத்தல்காரர்களுமேஎன அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

பிரதமருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றில் நேற்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிட்டவர்கள் யார்? லசந்த விக்ரமதுங்க, எக்னெலிகொட போன்ற ஊடகவியலாளர்களைக் கடத்தியவர்களும் கொலை செய்தவர்களுமே கொலை, கொள்ளை, கடத்தல் போன்றவற்றுடன் தொடர்புடையவர்களுமே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிட்டுள்ளார்கள்.

இவ்வாறிருக்கு இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை எவ்வாறு நம்புவது? – என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன்,2015ஆம்ஆண்டு காலப்பகுதியில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஏற்பட்ட அனைத்து விதமான ஆபத்திலிருந்தும் அவரை காப்பாற்றியவர் ரணில் விக்கிரமசிங்கவே எனவும் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

அர்ஜூன் மகேந்திரனை நியமித்த குற்றத்துக்காக பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவீர்களாயின், மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக 100 பிரேரணைகள் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும். – எனவும் அவர் குறிப்பிட்டார்.

# கொழும்பு – இந்தியப் பங்குப் பரிவர்த்தனை புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது



கொழும்பு பங்குப் பரிவர்த்தனை இந்தியாவின் தேசிய பங்குப் பரிவர்த்தனையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இரண்டு பங்குச் சந்தைகளுக்கும் இடையில் முதலீட்டு வாய்ப்புக்களை ஒத்துழைப்புக்களையும் வலுப்படுத்துவதே இதன் நோக்கமாகும் என்று கொழும்புப்பங்குப்பரிவர்த்தனை நிலையம் அறிவித்துள்ளது.

தகவல் அறிவு, தொழில்நுட்பம் ஆகிய துறைகளிலான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வது இதன் மற்றுமொரு நோக்கமாகும்.

## நாளை

06.04.2018
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம் : கேட்டை பி.ப. 12.48 வரை
திதி : ஷஷ்டி மு.இ. 10.11 வரை
சுபநேரம் : 6.08 – 7.38 வரை
இராகுகாலம் : 10.38 – 12.08 வரை

# கலைத்துறையின் புலமைசார் உரிமம் தொடர்பிலான குழுவின் அறிக்கைகள் ஜனாதிபதியிடம் கையளிப்பு!





தேசிய சினிமா, நாடகம் மற்றும் இசைத் துறையின் புலமைசார் உரிமம் பற்றிய குழுவின் அறிக்கைகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டன.

கோட்டை ஜனாதிபதி மாளிகையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் திருமதி தீபானி சில்வா உள்ளிட்ட பிரபல கலைஞர்கள் குழுவால் தேசிய நாடகத்துறை பற்றிய அறிக்கை இதன்போது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதி, அதனை நிதி மற்றும் வெகுசன ஊடகத் துறை அமைச்சர் லசந்த அழகியவன்னவிடம் கையளித்தார்.

தேசிய சினிமாத் துறையை கட்டியெழுப்புவது தொடர்பான வரைவு திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சிதேந்திர சேனாரத்னவால் இதன்போது ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டது.

ஜனாதிபதி அதனை பொது நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் சட்டமும் ஒழுங்கும் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவிடம் ஒப்படைத்தார்.

இசைத் துறையில் ஈடுபட்டுள்ள பாடலாசிரியர்கள், இசையமைப்பாளர்கள், பாடகர்கள் உள்ளிட்டோரின் பங்களிப்பு தொடர்பான புலமைசார் உரிமம் பற்றிய குழுவின் அறிக்கை அக்குழுவின் தலைவர், ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் பி.கே. எஸ் ரவீந்திரவினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டமையுடன் ஜனாதிபதி அதனை கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சின் செயலாளர் கே.டி.என். ரஞ்சித் அசோக விடம் கையளித்தார்.

இதன்போது ஜனாதிபதி அங்கு தெரிவித்தவை வருமாறு:-

இக்குழு அறிக்கைகளின் பரிந்துரைகளை செயற்படுத்துதல் தொடர்பாக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர்களும் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட நிறுவனத் தலைவர்களும் உரிய முறையில் தமது கடமைகளை நிறைவேற்றுவார்கள் என நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

அதேபோல், இந்த விடயம் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய அனைவரும் இரு வாரங்களுக்கு ஒருமுறை ஒன்றுகூடி, இந்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பது முக்கியமானது என.- ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் கயந்த கருணாதிலக்க, பிரதியமைச்சர்கள் லசந்த அழகியவன்ன, ரஞ்சன் ராமநாயக்க மற்றும் பெருந்தொகையான கலைத்துறைப் பிரபலங்கள் கலந்துகொண்டனர். (க)

# இலங்கையின் பல இடங்களிலும் மழை; மின்னல் குறித்து மக்களுக்கு எச்சரிக்கை



கொழும்பு, ஏப்.05

இலங்கையில் நிலவிவந்த வறட்சியான கால நிலையில் சற்று மாறுதல் ஏற்பட்டு நாட்டின் பல பாகங்களிலும் மழை பெய்வதற்கான வாய்ப்புக்கள் தென்படுகின்றன என இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் இதனை அறிவித்துள்ளது.

இதன்படி, நாட்டின் மேற்கு, சப்ரகமுவ, தெற்கு, மத்திய, ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களின் பல இடங் களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களின் கரையோரப் பகுதிகளில் காலைவேளையிலும் ஓரளவு மழைபெய்யக் கூடும் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தத் திணைக்களம் இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களின் சில இடங்களில் காலை வேளையில் பனி மூட்டம் நிலவக்கூடும். மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் ஊடாக அம்பாந்தோட்டை வரையான கரையோரப் பகுதிகளில் ஓரளவு மழை பெய்யும்.

மாலை மற்றும் இரவு வேளைகளில் கரையோரத்தின் சில பகுதிகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். இடியுடன் கூடிய மழையின் போது அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

இடிமின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள பொதுமக்கள் அவதானமாக செயற்படுமாறு திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது எனக் கூறப்பட்டுள்ளது. (க)

# இரத்தினபுரியில் மோசடியில் ஈடுபடும் சிறு வர்த்தகர்கள் மீது நடவடிக்கை



கொழும்பு, ஏப். 05

பொருள்களை விற்பனை செய்யும்போது அளவைகளில் மோசடியை மேற்கொள்ளும் வர்த்தகர்களை கண்டுபிடிக்கும் நடவடிக்கையை இரத்தினபுரி மாவட்ட அளவீட்டுத் தரப்பிரிவு மற்றும் சேவைப் பிரிவின் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சிறுவர்த்தகர்களிடமிருந்து நுகர்வோரை பாதுகாப்பதே இதன் நோக்கமாகும்.

மரக்கறி மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் விற்பனை செய்த சிறுவர்த்தகர்கள் இதன்போது சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இந்த நடவடிக்கையின் போது மோசடி நடவடிக்கையில் ஈடுபட்ட 25 வர்த்தகர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் , மோசடி அளவீட்டு கருவிகளையும் இதன்போது அதிகாரிகள் கைப்பற்றினர்.

# கல்விசாரா ஊழியர்களின் போராட்டம் தொடர்கிறது!

கொழும்பு, ஏப். 05

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களால் ஆரம்பிக்கப்பட்ட வேலைநிறுத்தப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்துக்கின்றோம் என பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட அமைச்சருடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையை நேற்றுமுன்தினம் அமுல்படுத்தாததன் காரணமாக வேலைநிறுத்தப் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பள உயர்வு மற்றும் கொடுப்பனவுகளை அதிகரித்தல் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புலிகளின் உறுப்பினர் பாலகுமாரனின் மகளின் திருமண நிகழ்வு திருச்சியில்



விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரனின் மகளின் திருமண நிகழ்வு தமிழகத்தில் நடைபெற்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருச்சியில் உள்ள தனியார் மண்டபத்தில் இடம்பெற்ற இந்த திருமண நிகழ்வில் முக்கிய அரசியல் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தியுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான க.வே.பாலகுமாரனும் அவரது மகனும் (சூரியதீபனும்) இறுதி யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் இராணுவத்தினரிடம் சரணடைந்த நிலையில் காணாமற் போயிருந்தார்கள்.

இந்த நிலையிலே, இவரது மகள் மகிழினியின் திருமணம் தமிழகத்தில் நடைபெற்றது. இந்தத் திருமணவிழாவில் தமிழகத்தில் உள்ள முக்கிய அரசியல் பிரமுகர்களான பழ.நெடுமாறன், சீமான் மற்றும் பஷீர் சேகுதாவூத் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

க.வே.பாலகுமாரன் ஈரோஸ் அமைப்பின் பொதுக் குழுத் தலைவராக இருந்த கால கட்டத்தில் பஷீர் சேகுதாவூத் அவருடன் இணைந்து பணியாற்றியுள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான பஷீர் சேகு தாவூத் மு.காங்கிரஸில் இருந்து பிரிந்து சென்று தனிக் கட்சியை உருவாக்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் க.வே.பாலகுமாரனின் மகளுடைய திருமண நிகழ்வில் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாருக்கும் சோரம் போகாது

## மாநகரசபை உறுப்பினர் ஹென்றி மகேந்திரன்



கல்முனை,ஏப்.05

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாருக்கும் சோரம் போகாது. கல்முனையில் தமிழர்களின் தனித்துவத்தைக் காப்பாற்றவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தனித்து முதல்வர் பதவிக்காக போட்டியிட்டது எனக் கல்முனை மாநகரசபை உறுப்பினர் ஹென்றி மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பில் தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

நாம் தோற்போம் என்று தெரிந்தும் கல்முனைத் தமிழர்களின் தனித்துவத்தைக் காப்பாற்றவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனித்து முதல்வர் பதவிக்காகப் போட்டியிட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் நாம் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து பேச்சு நடத்தியிருந்தோம். அதற்கான சாதகமான பதில் எதுவும் கடைசிவரை கிடைக்கவில்லை.

கல்முனைத் தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகம் தரம் உயர்த்தல் மற்றும் சாய்ந்தமருதுக்குத் தனியான பிரதேச சபை கொடுக்கப்பட்டால் கல்முனைப் பிரதேசத்தை மூன்று கூறுகளாகப் பிரித்து சபைகளை உரு வாக்குவதை நிறுத்தவேண்டும்.

அத்துடன், கல்முனைத்தமிழர்களுக்கென தனியான ஒரு நகர சபையை அல்லது பிரதேசசபையை வழங்குவதற்கு ஆதரவு வழங்க வேண்டும்.

கல்முனை நகர அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் தமிழர்களின் நெற்காணிகளைச் சுவீகரிப்பதை நிறுத்துவதுடன், கல்முனைத் தமிழர்களின் செறிவைக் குறைப்பதற்கான முயற்சிகளைக் கைவிட வேண்டும்.- ஆகிய மூன்று கோரிக்கைகளை வைத்தோம்.

அது தொடர்பாக எதுவித பதிலும் எமக்குக் கிடைக்கவில்லை. இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது தனித்துவத்தைக் காக்கும் வகையில் இயங்குவது என முடிவெடுத்தோம்.

கல்முனையில் முதல்வராக முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் சட்டத்தரணி றக்கீப், பிரதி முதல்வராக தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் காத்தமுத்து கணேஷ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

ஒரு தமிழரும், முஸ்லிமும் தெரிவாகியுள்ளனர் என்பதற்காகக் கல்முனை வாழ் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு இடையிலான பிரச்சினைகள் தீர்ந்துவிடும், ஐக்கியம் ஏற்பட்டுவிடும் எனக் கூற முடியாது.

இவர்களின் நான்கு வருட ஆட்சியை வைத்துத்தான் பிரதேசத்தின் நிலைமையைக்கூற முடியும். அதுவரை பொறுத்திருந்து பார்க்க வேண்டியுள்ளது.- எனத் தெரிவித்துள்ளார்.

# திருகோணமலை சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம்



திருகோணமலை,ஏப்.05

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் திருகோணமலை மாவட்டத்தில் வெற்றி பெற்ற உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு, கிழக்கு மாகாண சபை கேட்போர் கூடத்தில், சேருவில தொகுதியின் பிரதான அமைப்பாளர் நளின் குணவர்த்தன தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மொறவெவ, சேருவில, கோமரங்கடவெல, கந்தளாய், வெருகல், பதவிசிறிபுர, தம்பலகாமம் ஆகிய பிரதேச சபைகளுக்குத் தெரிவான 21 உறுப்பினர்கள், இதன்போது சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

# போரதீவுப்பற்று பிரதேச சபையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வசம்



போரதீவுப்பற்று பிரதேசசபையின் ஆட்சியதிகாரத்தைத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது.

18 உறுப்பினர்களைக்கொண்ட போரதீவுப்பற்று பிரதேசசபையில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினரான சிதம்பரப்பிள்ளை ரஜனி தவிசாளராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். பிரதித் தவிசாளராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாராயண பிள்ளை தர்மலிங்கம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

போரதீவுப்பற்றுப் பிரதேச சபையின் அமர்வு நேற்றுக் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.வை. எம்.சலீம்தலைமையில் நடைபெற்றது. தவிசாளர் மற்றும் உப தவிசாளரை தெரிவுசெய்யும் அமர்வாக நடத்தப்பட்டது.

தவிசாளரைத் தெரிவுசெய்யும் போட்டியில் சுயேச்சைக்குழுவில் தெரிவான ஆயிஸ்மன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான சிதம்பரப்பிள்ளை ரஜனி ஆகியோருக்கு இடையில் போட்டி நிலவியது.

இதன்போது தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி மற்றும் ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்பன இணைந்து சுயேச்சைக் குழுவில் தெரிவான ஆயிஸ்மனுக்கு ஆதரவாக வாக்களித்தன.

இதேபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மற்றும் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி ஆகிய உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான சிதம் பரப்பிள்ளை ரஜனிக்கு வாக்களித்தனர்.

இதனடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான சிதம்பரப்பிள்ளை ரஜனி கூடுதலாக ஒரு வாக்கைப் பெற்று தவிசாளராக தெரிவுசெய்யப்பட்டார்.

பிரதித் தவிசாளராக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாராயண பிள்ளை தர்மலிங்கம் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜெ.இந்துஜா ஆகியோர் போட்டியிட்ட நிலையில் ஒரு வாக்கால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதி தவிசாளராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இதன்போது தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் ஓர் உறுப்பினர் நடுநிலையாக வாக்களிக்காதிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிறப்பாக கடமையாற்றிய பொலிஸார் கௌரவிப்பு



மட்டக்களப்பு,ஏப்.05

சிறப்பாகக் கடமையை முன்னெடுத்த பொலிஸாரை வெகுமதி வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை மட்டக்களப்பு பார் வீதியில் உள்ள சதுனாவில், கிழக்கு மாகாண பிரதிப்பொலிஸ்மா அதிபர் கபில ஜயசேகர தலைமையில் நடைபெற்றுள்ளது.

இதன்போது, மாவட்டத்தில் உள்ள 12 பொலிஸ் நிலையங்களிலும் கடந்த ஒரு வருடத்தில் பல்வேறு வழிகளில் சிறப்பான செயற்பாட்டை வெளிப்படுத்திய பொலிஸ் உத்தியோகத்தர்கள் வெகுமதி வழங்கிக் கௌவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் எம்.உதயகுமார், மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் ஜாக்கொட ஆராய்ச்சி, மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.என்.எஸ். மெண்டிஸ் மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

# கூட்டமைப்புக்கு எமது கட்சி ஆதரவு வழங்கியுள்ளது




மட்டக்களப்பு,ஏப்.05

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்க் கட்சிகள் தனித்து ஆட்சியமைக்க வேண்டும் என்பதற்காக தமது கட்சி ஆதரவை வழங்கியுள்ளது எனத் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதியமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில் பற்று, போரதீவுப்பற்று, பட்டிப்பளை ஆகிய பிரதேச சபையில் ஆட்சியை அமைப்பதற்கு தமது கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவை வழங்கியுள்ளது என அவர் தெரிவித்தார்.

தேசியக்கட்சிகள் தமிழ்ப் பகுதிகளில் ஆட்சியமைப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்த அவர், தமிழ்ப் பகுதிகளில் தமிழ்க் கட்சிகள் தனித்து ஆட்சியமைப்பதற்குத் தமது கட்சி ஆதரவு வழங்கும் எனத் தெரிவித்தார்.

போரதீவுப்பற்றுப் பிரதேசசபையின் ஆட்சியை தமிழ் தேசிய கூட்டமைப்பு வெற்றி கொள்வதற்கு காரணமாக முன்னாள் பிரதியமைச்சரான விநாயகமூர்த்தி முரளிதரனின் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் போரதீவுப்பற்று உறுப்பினர் வினேஸ்வரனின் ஆதரவே முக்கியமானதாக இருந்தது என்று குறிப்பிடத்தக்கது.

# இலங்கை வரலாற்றில் பிரதமருக்கு எதிரான மூன்றாவது நம்பிக்கையில்லாப் பிரேரணை

கொழும்பு, ஏப். 05

இலங்கை வரலாற்றில் பிரதமருக்கு எதிரான மூன்றாவது நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது நேற்று நாடாளுமன்றுக்கு வந்தது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கூட்டு எதிரணியினரால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று விவாதிக்கப்பட்டது.



இதற்கு முன்னர் 1957 ஆம் ஆண்டிலும், 1975 ஆம் ஆண்டிலும் இரண்டு தடவைகள் பிரதமருக்கு எதிராக இலங்கை நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டு வரப்பட்டிருந்தன.

முதலாவது நம்பிக்கையில்லாப் பிரேரணை, 1957ஆம் ஆண்டு, பிரதமராக இருந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவுக்கு எதிராககொண்டு வரப்பட்டது.

அது வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது, ஒரே ஒரு உறுப்பினர் மாத்திரம் அதற்கு ஆதரவாக வாக்களித்தார்.

எதிராக 45 வாக்குகள் அளிக்கப்பட்டமையால், அந்தப் பிரேரணை தோல்வியடைந்தது.

இரண்டாவது நம்பிக்கையில்லாப் பிரேரணை, 1975 ஆம் ஆண்டு- பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டது.

1975 டிசெம்பர் 24ஆம் திகதி நடந்த வாக்கெடுப்பில், நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு 43 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர். 100 உறுப்பினர்கள் அதனை எதிர்த்தனர். இதனால் நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வி அடைந்தது.

பிரதமருக்கு எதிரான மூன்றாவது நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று சபைக்கு வந்தது.

இலங்கை நாடாளுமன்றவரலாற்றில் முன்வைக்கப்பட்டுள்ள 47 ஆவது நம்பிக்கையில்லாப் பிரேரணை இதுவாகும்.

இதற்கு முன்னர் 23 நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் அரசுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளன. 13 நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் அமைச்சர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டன.

சபாநாயகர்கள் மற்றும் பிரதி சபாநாயகர்களுக்கு எதிராக 6 நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராக ஒரு தடவையும், தலைமை நீதியரசருக்கு எதிராக ஒருமுறையும் நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாடு செல்ல யோஷித்தவுக்கு அனுமதி!



கொழும்பு, ஏப். 05

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகனான யோஷித்த ராஜபக்ஷ தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டு, ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு செல்வதற்கு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி ஏ.ஆர்.ஆர். ஐயன் தொட்டுவ அனுமதி வழங்கியுள்ளார்.

நேற்றுத் தொடக்கம் எதிர்வரும் 12 ஆம் திகதிவரை இவ்வாறு சுற்றுப்பயணம் செய்வதற்கு, மேல்நீதிமன்றம்அனுமதி வழங்கியுள்ளதுடன், தற்போது, நீதிமன்றத்தின் பொறுப்பில் உள்ள அவரது வெளிநாட்டுக் கடவுச்சீட்டை வழங்குவதற்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

## புதிய இறைவரி சட்டத்திற்கு அமைவாக காணி விற்பனை இராஜாங்க அமைச்சர் இரான் விக்கிரமரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 05

புதிய உள்நாட்டு இறை வரிச் சட்டத்திற்கு அமைவாக காணியை விற்பதன் மூலம் கிடைக்கும் மொத்த பணத்திற்கும் 10 வீத வரி அறவிடப் படும் என்று உண்மைக்கு புறம்பான பிரசாரம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் இரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வரி எதுவும் அறவிடப்படுவதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

*2017ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி 9 லட்சம் ரூபாவாக மதிப்பீடு செய்யப்பட்ட 1பேர்ச் காணியை 10 லட்சம் ரூபாவிற்கு விற்றால் அதில் 1 லட்சம் ரூபாவிற்கு மாத் திரமே 10 சதவீத வரி அறவிடப்படும் என்று இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.*



இதற்காகவே இவ்வாறான போலிப் பிரசாரம் மேற்கொள்ளப்படுகின்றது. குடும்பத்தில் அம்மா, அப்பா இருப்பார்களாயின் இவர்களுக்கு பிள்ளைகளும் இருப்பார்களாயின் அந்தப் பிள்ளைகளுக்கு பரிசாக வழங்கப்படுமாயின் அந்தச் சொத்துக்கானவரி அறவிடப்படமாட்டாது. மூலதன வரியும் அறவிடப்படமாட்டாது.

இந்த மூலதன வரி இதற்கு அப்பாலே அறவிடப்படும். இதனை அறவிடுவதாயின், வருமானமாக எடுத்துக் கொள்வதாயின், பணம் திரட்டுவதாயின் அதாவது நேர்மையற்ற வரி அறவீடாக அமையும்.

வரிமூலம் சமூகத்தில் நேர்மையான நிலையை முன்னெடுப்பதே நோக்கம். வரி என்பது ஒருவரிடம் அறவிட்டு இல்லாதவருக்கு பங்கை அதிகரிப்பதாகும் இதில் பெரும் நோக்கமுண்டு. அதுவே இதனூடாகநிறைவேற்றப்படுகின்றது என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

## பரிசளிப்பு விழா

ஆறுகால்மடம், ஏப்.05

ஆறுகால்மடம் அரசடி ஞான வைரவர் சுவாமிகோவில் வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு பரிசளிப்பு விழா மற்றும் கலை நிகழ்வு என்பன அறிவொளி கலையரங்கில் நடைபெறவுள்ளன.

மேற்படி நிகழ்வு அறிவொளி சன சமூக நிலையத்தின் தலைவர் சி.க. தம்பிராசா தலைமையில் நடைபெறவுள்ளன.

இதில் பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் இ.ஜெயசேகரன் கலந்துகொள்ளவுள்ளார்.

## ஏழு தலைகள் நாகத்தை கொண்ட புத்தர் சிலையுடன் நால்வர் கைது!

கொழும்பு, ஏப். 05

7 தலைகளுடனான நாகத்தை கொண்ட புத்தர் சிலை யுடன், புசல்லாவ பகுதியில் சந்தேக நபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரோந்து பணிகளில் ஈடுபட்டிருந்த புசல்லாவ பொலிஸாரால் இந்த நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த கார் ஒன்றைப் புசல்லாவ பொலிஸார் சோதனையிட்ட போது, காரினுள் இருந்து புராதன உரிமம் உடைய 7 தலை நாகத்தைக் கொண்ட புத்தர் சிலை ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது, 30, 35 மற்றும் 40 வயதுகளை உடைய மாவத்தகம, எய்யந்துடுவ, நிட்டம்புவ மற்றும் கொத்மலை பகுதிகளைச் சேர்ந்த நால்வரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 7 தலை நாகத்தைக் கொண்ட புராதன புத்தர் சிலை, அசிட் போத்தல்கள் மற்றும் சந்தேகநபர்கள் பயணித்த கார் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த நிலையில், சந்தேக நபர்கள் நால்வரும் நேற்று முன்தினம் கம்பளை நீதிவான் நீதிமன்றத்தில் முன் நிலைப்படுத்தப்பட்ட நிலையில் நால்வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

(க)

# கலாசாரபேரவையின் கூட்டம்

யாழ்ப்பாணப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையினது கூட்டமும் யாழ் பிரதேச செயலக (யாழ். பாடி) நூல் வெளியீடு சம்பந்தமான ஆலோசனைக் கூட்டமும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பிரதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் வட மாகாண முதலமைச்சர் விருது மற்றும் இளம் கலைஞர்களை ஊக்குவிப்பதற்கான பரிசுகள் வழங்கல், திறந்த நூல் பரிசுத் தேர்வுகலை மன்றங்களுக் கிடையிலான போட்டிகள் நடத்துவது பற்றிய ஆலோசனைகள், ஆராய்வுகள் இடம்பெறவுள்ளன.

## நேர்முகத்தேர்வு யாழில்
# தனியார் கம்பனியில் 250 வெற்றிடங்கள்

யாழ். மாவட்டத்தில் தொழில் தேடுவோருக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை யாழ். மாவட்ட செயலகத்தின் பொதுமக்கள் தொழில் சேவை மத்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொழில் தேடுவோருக்கான தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் மாவட்டப் பொதுமக்கள் தொழில் சேவை மத்திய நிலையம் நடைமுறைப்படுத்திவரும் நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக நாடு முழுவதும் கிளைகளைக்கொண்டுள்ளமுன்னணி தனியார்கம்பனிஒன்றின்250 வரையிலான தொழில் வெற்றிடங்களுக்கு ஆள்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகத்தேர்வுஇடம்பெறவுள்ளது.

இந்த நேர்முகத்தேர்வில் கலந்துகொள்ள விரும்புவோர் க.பொ.த. சாதாரண தரத்தில் ஐந்து பாடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் சித்தி அடைந்தவர்கள், க.பொ.த. உயர்தரம் கற்றவர்கள் மற்றும் சித்தியடைந்த 40 வயதுக் குட்பட்ட ஆண் மற்றும் 24 வயதுக்குட்பட்ட பெண் விண்ணப்பதாரிகள் கலந்துகொண்டு தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலதிக விவரங்களை 021 221 9359 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டோ அல்லது மாவட்ட செயலகத்தின் பொதுமக்கள் தொழில் சேவை மத்திய நிலையத்தின் பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோத்தர்களிடம் நேரடியாக பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# தினசரி ராசி பலன் (05.04.2018)

*2018 ஆம் ஆண்டு ஏவிளம்பிவருடம் பங்குனித்திங்கள் 22 ஆம் நாள் வியாழக்கிழமை பஞ்சமித்திதி மாலை 7.01 மணி வரை. பின்னர் ஷஷ்டி. நட்சத்திரம்: அனுஷம். காலை 9.19 மணி வரை. பின்னர் கேட்டை. சித்தயோகம் காலை 9.19 வரை. பின்னர் அசுபயோகம்.*

**ராகுகாலம்** - *பகல் 01.44 மணி முதல் 03.16 மணி வரை*

**சுபநேரம்** - *காலை 07.34 மணி முதல் 09.04 மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *பங்குனி மாத தேய்பிறை பஞ்சமி.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *கேட்டை.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** கவலையான நாள். பணவரவு குறையும். உத்தியோகத்தர்களுக்கு பணிகளில் உயர் அதிகாரிகளின் அதிருப்தியும், கெடுபிடிகளும் காணப்படும். நண்பர்கள், உறவினர்கள் பாராமுகமாக நடந்து கொள்வார்கள்.

**ரிஷபம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். குடும்பத்தில் இனக்கமான போக்கு நிலவி வரும். பணம் கொடுக்கல், வாங்கலில் நிதானப் போக்கு தேவை.

**மிதுனம்** ஆக்கபூர்வமான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் கனிவான போக்குக் காணப்படும். அந்நிய மொழி பேசுபவரால் நன்மை உண்டாகும். கைவிட்டுப் போன பொருள் ஒன்று திரும்பக் கிடைக்கும்.

**கடகம்** இன்பமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலமான போக்குக் காணப்படும்.சிலருக்கு திடீர் திருமண யோகம் ஏற்படும். பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேர்வார்கள்.

**சிம்மம்** சலனம் மிகுந்த நாள். வருமானம் குறைவாக இருக்கும். குடும்பத்தில் அமைதி குன்றிக் காணப்படும். நம்பியவர்கள் ஏமாற்றப் பார்ப்பார்கள். வீடு வாங்கு வது விற்பது போன்ற விடயங்களில் கவனம் தேவை.

**கன்னி** மத்திமமான நாள். பொருளாதாரம் சுமாராக இருக்கும். உடல், உபாதைகள் ஏற்பட்டுக் குணமாகும். வியாபாரத்தில் தேக்க நிலை காணப்படும். குடும்ப அமைதி பேணப்படும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.

**துலாம்** யோகமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் சந்தோஷம் நீடிக்கும். வீடு, வாகன யோகம் உண்டாகும். திருமண வாய்ப்புக்கள் வலிய வரும்.

**விருச்சிகம்** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப நிலையில் சுமுகமான போக்குக் காணப்படும். அரசாங்கம் மூலம் அனுகூலம் உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் திருப்தி நிலவும்.

**தனுசு** அலைச்சல் மிகுந்த நாள். தொழில் ரீதியான அலைச்சல்கள் அதிகமாகும். படித்து முடித்த மாணவர்கள் வேலை தேடி அலைவார்கள். தொழிலாளர்கள் தொழில் வாய்ப்புத் தேடி அலைவார்கள்.

**மகரம்** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்ப உறவு பலப்படும். பிரிந்த உறவுகள் மீண்டும் இணையும் வாய்ப்பு உண்டாகும். வியாபாரத் தொழில் ஏற்றமடைவார்கள்.

**கும்பம்** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். தொழிலில் அதிக கவனம் தேவை. உத்தியோகத்தர்களுக்கு அலுவலகத்தில் எதிர்ப்பு வலுத்துவரக் கூடும்.

**மீனம்** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். தொழிலில் மேன்மை உண்டாகும். எண்ணிய காரியங்கள் கைகூடும். வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும்.

**சந்திராட்டம நாள்:அசுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# வடக்கு, தெற்கு முதியவர்களின் கலைநிகழ்வு இன்று கைதடியில்

குருநாகலில்இருந்து இன்றுவியாழக்கிழமை நூறு வரையிலான முதியவர்கள் யாழ்ப்பாணம்வருகைதரவுள்ளனர். இந்தப் பகுதியில் உள்ள மூத்தோர் சங்கங்களைச்சேர்ந்தவர்கள் மூன்று நாள் பயணமாக வருகை தரவுள்ளனர். கைதடி அரசமுதியோர்இல்லத்துக்கு வருகை தரும் இந்தமுதியவர்கள்இல்லத்தில் நடைபெறும் பல்வேறுபட்ட நிகழ்வுகளில் கலந்து கொள்வர்.

வடக்குமாகாணமூத்தோர் பேரவை மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் போன்றவற்றின் அனுசரணையுடன்கைதடிமுதியோர் இல்லத்தின் திறந்தவெளி அரங்கில் இன்று மாலை 6 மணிக்கு விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இந்த நிகழ்வுகளில் வடக்கு, தெற்கு முதியவர்கள் இணைந்து நடத்தும் கருத்துக்களும், கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

# மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக் கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை -

**மன்னார் பிரதேசத்தில் -** தலை மன்னார் பிரதேசம் ஒரு பகுதி, கட்டையடம்பன், மளவராயர்கட்டையடம்பன் ஆகிய பிரதேசங்களிலும் - மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# 'சிறுவர் செந்தமிழ் பாடல்கள்' நூல் அறிமுக விழா சனியன்று

யாழ்ப்பாணம், ஏப்.05

கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலைய அனுசரணையுடன் புலவர் ம.பாலசுப்பிரமணியத்தின் 'சிறுவர் செந்தமிழ் பாடல்கள்' நூல் அறிமுக விழா நாளை மறுதினம் 7 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இல.345, கோவில் வீதி, நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் கருவி நிறுவனத் தலைவர் க.தர்மசேகரம் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் ஆசியுரையை நல்லூர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் சிறப்புரைகளை பயிற்றுநர் மொழித்திறன் காசிநாதர் விஜயராஜசிங்கம், யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, கருவி நிறுவன நலச் சேவை இணைப்பாளர் கிறிஷ்ணசாமி ஐங்கரன், யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக முன்பள்ளிஉதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன், தென்மராட்சி வலய ஆரம்பக்கல்வி முதன்மை ஆசிரியர் சிவலிங்கம் சிவதர்சன் ஆகியோரும் ஆற்றுவார்.

# சம்பூரில் முத்தமிழ் விழா

சம்பூர் தமிழ் கலாமன்றம் நடத்தும் முத்தமிழ் விழா சம்பூர் கலாசார மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை மருத்துவ கலாநிதி அ. சதீஸ்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது. வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தமிழன்னையின் பவனியுடன் ஆரம்பமாகும் முதன் நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராக திருகோணமலை திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபையின் தலைவர் க.அருள்சுப்பிரமணியம் கலந்துகொள்ளவுள்ளார்.

இரண்டாம் நாள் சனிக்கிழமை தென்கைலை ஆதீன அகத்தியர் அடிகளாரின் சிறப்பு ஆசியுரையுடன் விழா ஆரம்பமாகும்.

இந்த விழாவில் முதன்மை விருந்தினராக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க. துரைரட்ணசிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். இறுதிநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள விழாவுக்கு முதன்மை விருந்தினராக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் வளர்மதி ரவீந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

# கலாசார மத்திய நிலைய திறப்பு விழா ஞாயிறன்று

வரணி, சிட்டிவேரம் அம்மன்கோவில்பகுதியில் அமைக்கப்பட்ட தென்மராட்சி கலாசார மத்திய நிலையத்தின் திறப்புவிழா எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் உள்ளக அலுவல்கள் வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அபிவிருத்தி அமைச்சர் எஸ். பீ.நாவின்னமுதன்மை விருந்தினராகக்கலந்து கொண்டு கலாசார மத்திய நிலையத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் உள்ளக அலுவல்கள் வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார பிரதி அமைச்சர் பாலித தேவாரப்பெரும, வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன், சிறுவர்விவகாரஅமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# நிர்வாகிகள் தெரிவு

வேலணைப் பிரதேச செயலகப் பிரிவு ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கத்தின் தலைவர் எஸ்.கே.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வேலணை பிரதேச செயலர் அம்பலவாணர் சோதிநாதனும் சிறப்புவிருந்தினர்களாகவேலணைபிரதேச செயலக கணக்காளர் இ.நமனன், வேலணை கொமர்ஷல் வங்கி முகாமையாளர் வி.மதியுகன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இச் சங்கப் பொதுக் கூட்டத்தில் மூத்த ஓய்வூதியர்கள் பலர் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர். அத்துடன், பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. புதிய ஆண்டுக்கான நிர்வாகிகளும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

# முதலிடம் பெற்ற வேம்படி மாணவி வடமாகாண ஆளுநரால் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஏப் 05

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் தமிழ்மொழிமூலப் பரீட்சார்த்திகளில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரக் கல்லூரி மாணவி மிருதி சுரேஷ்குமாருக்கு வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே நேரில் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

மாணவியையும் பொறுப்பாசிரியையும் நேற்று முன்தினம் தனது அலுவலகத்துக்கு அழைத்துப் பாராட்டுத் தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர் பரிசில் பொதியையும் வழங்கிக் கௌரவித்தார்.

குடாநாட்டு மாணவர்கள் அண்மைக் காலமாகக் கல்வியில் முன்னேற்றம் கண்டு வருவது மகிழ்ச்சி அளிக்கின்றது எனக் குறிப்பிட்ட ஆளுநர், மாணவி மிருதி சுரேஷ்குமார் மேலும் கல்வியில் முன்னேற்றம் கண்டு இந்த நாட்டுக்குச் சேவையாற்ற வேண்டும் எனத் தெரிவித்தார்.

(ஐ)



## வவுணதீவு பிரதேசசபை கூட்டமைப்பு வசமானது

மட்டக்களப்பு,ஏப்.05

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு வவுணதீவுப் பிரதேச சபையின் ஆட்சி அதிகாரத்தையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது.

மட்டக்களப்பு - மண்முனை மேற்கு பிரதேச சபையின் அமர்வு உள்ளூராட்சி ஆணையாளர் எம்.வை.சலீம் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

சபையின் தவிசாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செல்லத்தம்பி சண்முகராசா, உப தவிசாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொ.செல்லத்துரை ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தவிசாளர் தெரிவு பகிரங்க வாக்கெடுப்பு மூலம் நடைபெற்றது.

இதில் செ.சண்முகராசாவுக்கு 10 வாக்குகளும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் த.இராமகிருஷ்ணனுக்கு 04 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

சபையின் வாக்கெடுப்பில்.தமிழ்த் தேசிய விடுதலைக்கூட்டமைப்பின் மூன்று உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஓர் உறுப்பினரும் நடுநிலை வகித்தமை குறிப்பிடத்தக்கது.

## யானையைக் கண்டு பயந்து ஓடியவர் சடலமாக மீட்பு

திருகோணமலையில் யானையைக் கண்டு பயந்து ஓடியவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை கோமரங்கடவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மயிலவெவ பகுதியில் வீதியோரத்தில் மீட்கப்பட்ட சடலத்தைச் சட்ட வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு நேற்று முன்தினம் மாலை திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிவான் எம்.பீ.அன்பார் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் கோமரங்கடவெல, 05ஆம் கட்டைப் பகுதியைச்சேர்ந்த ஆனந்தகே திலீப் ரஞ்சன (38வயது) என்பவருடையது எனப் பொலிஸார் தெரிவித்தார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது –

கோமரங்கடவெல பிரதேச சபை பெக்கோ இயந்திரத்தின் உதவியாளராகக் கடமையாற்றி வரும் குறித்த நபர், பதவியா, சிறிபுர பகுதியிலிருந்து கடமையை முடித்துவிட்டு வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் வரும் வேளை யானையைக் கண்டு பயந்து வீழ்ந்ததில் அவ்விடத்தில் உயிரிழந்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது எனவும் சட்ட வைத்திய பரிசோதனை முடிவடைந்த பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது எனவும் கோமரங்கடவெல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## குப்பி விளக்கு தவறி வீழ்ந்து பெண் பரிதாபமாக மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 05

யாழ்ப்பாணத்தில் குப்பி விளக்கு தவறி வீழ்ந்து தீப்பற்றியமையால் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

76 வயதான பொன்னம்பலம், சகுந்தலா தேவி என்ற வயோதிப் பெண் இச் சம்பவத்தில் உயிரிழந் துள்ளார்.

அதிகாலை உணவு செய்து கொண்டிருந்த பெண் மீது, மேசையில் இருந்த குப்பி விளக்கு புரண்டு விழுந்துள்ளமையால் உடலில் தீ பரவியுள்ளது.

தீயால் காயமடைந்த பெண் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும், சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

## ‘சமகாலத்தில் சர்வதேசம்’ நூல் வெளியீட்டு விழா

தர்மகுலசிங்கத்தின் ‘சம காலத்தில் சர்வதேசம்’ எனும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ். மாநகர சபை முன்னாள் பிரதம சுகாதார பரிசோதகரும், இளைப்பாறிய சிறுவர் நிதிய பதில் பணிப்பாளருமான பொ. ஜெகநாதன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்த விழாவில் வரவேற்புரையை கொழும்பு தேசிய சுவடிகள் திணைக்கள அலுவலர் செல்வி ஜனனி விஜயேந்திரனும், தலைமையுரையை பொ. ஜெகநாதனும் ஆசியுரையை மாநகரசபை முன்னாள் ஆணையாளரும் கிழக்கு மாகாண இளைப்பாறிய பிரதம செயலாளருமான வி.பி.பாலசிங்கமும் ஆற்றவார். வீரகேசரி பத்திரிகையின் ஆசியுரையை அதன் பிரதம ஆசிரியர் ஸ்ரீ.கஜன், வாழ்த்துரையை பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இளைப்பாறிய அதிபர் கவிஞர் சோ. பத்மநாதன் டான் ரி.வி. முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.எஸ். குகநாதன், புனர்வாழ்வு புனருத்தாரணம், புனரமைப்பு அமைச்சின் ஓய்வுபெற்ற செயலாளர் அ.ஜெயரத்தினம் ஆகியோர் வழங்குவர்.

வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம் பிள்ளை நிகழ்த்துவார். முதற் பிரதியை உயர் தொழிநுட்பக் கல்லூரி இளைப்பாறிய கணக்காளர் க.இராஜேஸ்வரன் பெறவுள்ளார். ஊடகப் பார்வையை வலம்புரி பத்திரிகை பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம், மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் கலாநிதி கே.ரி.கணேசலிங்கம், இலங்கை வெளிவிவகார அமைச்சின் இளைப்பாறிய இலங்கை இராஜதந்திரி ஜனாப். ஏ.சி.எம்.இப்ராகிம் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

அத்துடன், கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

# ஒலுவில் துறைமுகப் பணி துரித கதியில் ஆரம்பம்

கல்முனை, ஏப். 05

ஒலுவில் துறைமுகத்தின் பணிகளை துரிதமாக ஆரம்பிப்பதற்காக அங்கு தற்பொழுது உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசு தீர்மானித்துள்ளது.

அதனடிப்படையில் முன்மொழியப்பட்டுள்ள தீர்வு களான துறைமுகத்துக்குத் தெற்காக உள்ள கடற்கரைப் பகுதியில் மணல் அகழ்வுகளை மேற்கொள்ளல் மற்றும் வடக்கு கரையில் மணல் நிரப்புவதற்காக ஒன்றரைக் கோடி அமெரிக்க டொலர்கள் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கிணங்க வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொண்டு இந்த அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், அதற்கு உகந்த இயந்திரங்களை அரச கொள்முதல் முறையின் கீழ் கொள் முதல் செய்வதற்கும் துறைமுக மற்றும் கப்பல்துறை அமைச்சர் மஹிந்த சமரசிங்க சமர்ப்பித்த ஆவணங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# இலங்கையில் 100 வயதைக் கடந்து 250 வயோதிபர்கள்

கொழும்பு, ஏப். 05

நூறு வயதுக்கு மேற்பட்ட பிரஜைகளுக்கு மாதாந்த கொடுப்பனவை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இலங்கையில் 100 வயதைக் கடந்த 250 வயோதிபர்கள் வாழ்கின்றனர் எனப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

அதனடிப்படையில், அவர்களது வாழ்க்கைப் பாதுகாப்பு மற்றும் நலன்களை உறுதி செய்யும் நோக்கில், 100 வயதைக் கடந்த அனைத்து வயோதிபர்களுக்கும் மாதாந்தம் 5000 ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

இதனை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் சமூக வலுவூட் டல், நலனோம்புகை மற்றும் மலைநாட்டு உரிமைகள் தொடர்பான அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க வழங்கிய ஆவணங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



# ரணிலுக்கு ஆசி வேண்டி விசேட பிரார்த்தனை



கல்முனை,ஏப்.05

பிரதமரும், ஐக்கிய தேசிய கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆசி வேண்டி கல்முனையில் முஸ்லிம் மத பிரார்த்தனைகள் இடம்பெற்றுள்ளன.

கூட்டு எதிரணியால் கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டு நாட்டையும், தூரநோக்கான அபிவிருத்தி மற்றும் இனங்களுக்கு இடையேயான ஒற்றுமை போன்றவற்றை முன்னெடுக்கும் வல்லமையைப் பிரதமருக்கு அளிக்கும் வகையில் இந்த பிரார்த்தனை நடத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கல்முனைதலைமையகத்தில் கல்முனை அமைப்பாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.எஸ்.றஸ்ஸாக் தலைமையில் நேற்றுமுன்தினம் மாலை இந்தப் பிரார்த்தனை நடத்தப்பட்டது.

மௌலவி எம்.ஐ.எம்.றியாஸ் உள்ளிட்டவர்கள் துஆ பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

இந்த நிகழ்வில் கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான நடராசா நந்தினி, கணபதிப்பிள்ளை புவனேஸ்வரி ஆகியோரும் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை, ஐக்கிய தேசிய கட்சியின் கல் முனை பிரதேச கொள்கை பரப்புச் செயலாளர் அஸ்வான் சக்கப் மௌலானா உள்ளிட்ட கட்சிப் பிரமுகர்களும் ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.

# பொதுநலவாய மாநாட்டில் மட்டு. மாணவிக்கு வாய்ப்பு



லண்டனில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மட்டக்களப்பு - கோரளைப்பற்று பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த தாட்சாயிணி நிமலேந்திரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வரலாற்றிலேயே பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளும் முதல் மட்டக்களப்புப் பெண் என்ற பெருமையை தாட்சாயிணி நிமலேந்திரன் பெற்றுள்ளார்.

வோர் சைலட் கொலன்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் மட்டக்களப்பு எஸ்கோ நிறுவனம் கடந்த நான்கு வருட காலமாக நடைமுறைப்படுத்தி வந்த சிறுவர் பங்களிப்பு மற்றும் சிறுவர் உரிமைகளுக்காக பரிந்துரை செய்தல் திட்டங்களில் இருந்து இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அப்பகுதியின் பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் மற்றும் உதவி பிரதேச செயலாளர் உட்பட பலர் தாட்சாயிணியை சந்தித்து வாழ்த்து தெரிவித்தமையுடன், பயணம் பற்றிய ஆலோசனை களையும் வழங்கியுள்ளனர்.

# வன்முறைகளின் பின்னணியில் மஹிந்தவின் ஆதரவாளர்கள்

**அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு**

கொழும்பு, ஏப். 05

கண்டி - திகண மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தாமரை மொட்டை பிரதிநிதித்துவப்படுத்தும் இருவருக்கு தொடர்புகள் காணப்படுகின்றன என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் பங்கேற்று நேற்று உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.



இது தொடர்பில் ஆராய்ந்து பார்க்குமாறு பொலிஸாருக்கு நான் தொலைபேசியில் தொடர்புகொண்டு அறிவுறுத்தல் வழங்கினேன். எனினும் பொலிஸார் நடவடிக்கை எடுக்கத்தவறியுள்ளனர் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# அம்பாறையில் காணி மத்தியஸ்த சபை அமைக்கக் கோரி ஜனாதிபதிக்கு மகஜர்

அம்பாறை,ஏப்.05

அம்பாறை மாவட்டத்தில் காணி விசேட மத்தியஸ்தசபையை அமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனக் காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணியின் தலைவர் பி. கைறுடீன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நேற்றுமுன்தினம் மகஜரொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் பாரம்பரியமாக விவசாயம் மேற்கொள்ளப்பட்ட காணிகள் யுத்த காலத்தின் பின்னர் ஏனைய அபிவித்தித் திட்டங்களுக்கென எடுக்கப்பட்டுள்ளன என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த விவசாயக் காணிகளை மீள வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க காணி விசேட மத்தியஸ்த சபையை அம்பாறை மாவட்டத்தில் அமைப்பதால் தமிழ் பேசும் மக்கள் அவர்களது பிரச்சினைகளை இலகுவாகத் தீர்த்துக்கொள்ளவும், விரைவாக இதற்கான தீர்வைப் பெறவும் முடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, ஏனைய மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள விசேட காணி மத்தியஸ்த சபை போன்று அம்பாறை மாவட்டத்திலும் ஏற்படுத்துமாறும் அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ப)

# எகிப்து ஜனாதிபதித் தேர்தலும்

## பேரளவிலான ஜனநாயகமும்

எகிப்து அதிபர் பதவிக்கு நடந்த தேர்தலில் வெற்றி பெற்று பதவியைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறார் அப்துல் பட்டா எல் சிசி. 97.08% வாக்குகளைப் பெற்று மிகப் பெரிய வெற்றியை அவர் பெற்றிருந்தாலும், இந்தத் தேர்தல் பெயரளவில் மட்டுமே ஜனநாயகமானது என்று கடும் விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன. அவரை எதிர்த்துப் போட்டியிட்டவர்கள் நெருக்கடிக்கு உள்ளாகிப் போட்டியிலிருந்து விலகினர். ஒருவர் மட்டும் அவரை எதிர்த்து நின்றார். ஆனால், அவரே சிசி ஆதரவாளர்தான் என்பது மிகப் பெரிய நகைமுரண்.



தொடர்ந்து 30 ஆண்டுகளாக ஹோஸ்னி முபாரக் நடத்திய சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக, அரபு வசந்தத்தின் ஒரு பகுதியாக 2011இல் தலைநகர் கெய்ரோவின் தாஹ்ரீர் சதுக்கத்தில் மக்கள் எழுச்சி தொடங்கியது குறிப்பிடத்தக்கது. முன்னாள் ராணுவத் தளபதியான சிசி, 2013இல் முஸ்லிம் சகோதரத்துவம் அமைப்பின் ஆட்சியை அகற்றியவர். 2014இல் நடந்த தேர்தலில் வெற்றி பெற்று எகிப்தின் அதிபரானார்.

சமீபத்திய தேர்தலின்போது, அரசுக்கு எதிரான கருத்துகள் விவாதிக்கப்படுகின்றனவா என்று அரசு உன்னிப்பாகக் கவனித்தது. பல்வேறு கெடுபிடிகள் அமுலாக்கப்பட்டன. வாக்குப் பதிவும் மிகக் குறைவு தான். 41.5% வாக்குகள்தான் பதிவாகின. அதேசமயம், சிசிக்கு மக்களிடையே ஆதரவே இல்லை என்றும் கூறிவிட முடியாது. அரசியல் சித்தாந்தங்கள், தனி மனித உரிமைகள் எப்படியாக இருந்தாலும் சரி, 'நிலையான ஆட்சி தேவை' என்று கருதியவர்கள் அவருக்கு ஆதரவாகவே வாக்களித்திருப்பார்கள்.

2011இல் எகிப்து மக்கள் அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ய என்னென்ன காரணங்கள் இருந்தனவோ அவை இப்போதும் அப்படியே நீடிக்கின்றன. பொருளாதாரரீதியிலான பிரச்சினைகளும் அரசியல்ரீதியிலான ஒடுக்குமுறைகளும் தொடர்கின்றன. 2016இல் எகிப்து அரசு அமுல்படுத்திய செலாவணி மதிப்புக் குறைப்பு, மின்சாரத்துக்கு வழங்கிய மானியங்கள் ரத்து ஆகியவற்றால் மக்கள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். பன்னாட்டுச் செலாவணி நிதியத்திடமிருந்து பெரிய தொகையைக் கடனாகப்பெறுவதற்கு ஈடாக இந்த நடவடிக்கையை எடுத்ததாக சிசி அரசு சப்பைக் கட்டு கட்டியது. ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்தியவர்கள் நூற்றுக்கணக்கில் கொல்லப்பட்டமை தொடர்பாகத் தொடுக்கப்பட்ட வழக்கில் முபாரக் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை என்று அவர் விடுவிக்கப்பட்டிருக்கிறார். அதே சமயம், 2013இல் அதிபர் பதவியிலிருந்து முகம்மது மோர்சியை விலக்கப் போராடியவர்கள் மீது நீண்டகால தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன.



அதிபர் சிசி தன்னுடைய இரண்டாவது பதவிக்காலத்திலாவது வெளிப்படையாகச் செயல்படுகின்றமையையும், தான் செய்யும் செயல்களுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என்பதையும் எகிப்து மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அடிப்படையான ஜனநாயக உரிமைகளை மீட்பது, எதிர்க் கட்சிகளுக்கு மரியாதை அளிப்பது ஆகியவை மிகவும் அவசியம். அரபு நாடுகள் வட்டாரத்திலேயே பெரிய நாடான எகிப்து, பிற நாடுகளுக்கு நல்ல உதாரணமாகத் திகழுமா என்பது சிசி அரசின் நடவடிக்கைகளைப் பொறுத்தது!

# மட்டக்களப்பு பாடசாலைகளில் நிலவும் ஆளணி வெற்றிடங்களை நிரப்புங்கள்!

## இலங்கை ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

மட்டக்களப்பு,ஏப்.05

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களையும் மற்றும் ஆளணி வெற்றிடங்களையும் நிரப்ப உடனடி நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் கிழக்கு மாகாண ஆளுநரைக் கேட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கம் கடந்த திங்கட்கிழமை அதிகாரிகளுக்கு வேண்டுகோள் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது என அதன் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் பொன்னுத்துரை உதயரூபன் தெரிவித்துள்ளார்.

அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு கல்வி வலயத்திலுள்ள மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி, இந்துக் கல்லூரி, கல்லடி விபுலாநந்தா வித்தியாலயம், கோட்டமுனை கனிஷ்ட வித்தியாலயம், சென். ஜோசெப் வாஸ் வித்தியாலயம் ஆகியவற்றிலும், பட்டிருப்பு கல்வி வலயத்தில், செட்டிப்பாளையம் மகா வித்தியாலயம், காக்காச்சிவெட்டை விஷ்ணு வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும் அதிபர் வெற்றிடங்களும் மேலதிக ஆளணியினருக்கான வெற்றிடங்களும் காணப்படுகின்றன.

எனவே, கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காகவும், கல்விப் பின்னடைவைத் தவிர்ப்பதற்காகவும் இந்த அதிபர்கள் உள்ளிட்ட ஆளணி வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டும்.

மேலும், இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது 1998 இன் 23 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாகவும் ஸ்தாபன விதிக்கோவை அத்தியாயம் II இற்கமைவாகவும் 158930 அதிவிசேட வர்த்தமானியின் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கமைவாகவும் சேவைப் பிரமாணக் குறிப்பிற்க மைவாகவும் வெளிப்படைத்தன்மை யான நியமிப்புக்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
- என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர், கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளர், மாகாண ஆளுநரின் செயலாளர், மாகாண பிரதம செயலாளர், கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கு அந்த வேண்டுகோள் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அனுமதி மறுக்கப்பட்டிருந்த 105 வீடுகளுக்கு அனுமதி



மட்டக்களப்பு,ஏப்.05

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட அனுமதி மறுக்கப்பட்டிருந்த105 வீடுகளுக்கான அனுமதியை முன்னாள் பிரதியமைச்சர் சோ.கணேசமூர்த்தி பெற்றுக் கொடுத்துள்ளாரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம், வெல்லாவெளி பிரதேச செயலகத்துக்கான அபிவிருத்திக் குழுக் கூட்டம், முன்னாள் பிரதிய மைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டிருப்புத் தேர்தல் தொகுதியின் அமைப்பாளருமாகிய சோ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இதில் வெல்லாவெளி பிரதேச செயலகத்துக்கு இவ்வருடம் 270 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன எனவும் இதில் 105 வீடுகளுக்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளன எனவும் வெல்லாவெளி பிரதேச செயலாளர் எஸ்.ஆர்.ராகுலநாயகி, மட்டக்களப்பு மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் முகாமையாளர் க.ஜகநாதன் ஆகியோர் தெரிவித்திருந்தார்கள்.

இதனைக் கவனத்தில் கொண்ட முன்னாள் பிரதிய மைச்சர் சோ.கணேசமூர்த்தி தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவர், அமைச்சர்களுடன் கலந்துரையாடி, மறுக்கப்பட்ட வீடுகளுக்கான அனுமதியைப் பெற்றுக்கொடுத்துள்ளார்.

மேலும், பட்டிருப்புத் தேர்தல் தொகுதியில் காணப்படும் வீட்டுப் பிரச்சினைக்கு தீர்வு காண்பேன் எனவும் மேலதிகமாக வீடுகள், இவ்வருடத்தில் ஒதுக்கப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார் என முன்னாள் பிரதிஅமைச்சர் சோ. கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தைச் சேர்ந்த ஐந்து பேர் கடத்தல் பொருள்களுடன் கைது

யாழ்ப்பாணம், ஏப். 05

இந்தியாவில் இருந்து சட்ட விரோதமாக போதைப் பொருள்கடத்தலில் ஈடுபட்ட தமிழகத்தைச் சேர்ந்த ஐந்து மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட ஐந்து மீனவர்களையும் காங்கேசன்துறை பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

வடக்குப் பிராந்திய கடற்படை அதிகாரிகளுக்கு இந்தியாவில் இருந்து கடத்தல் பொருள்கள் இலங்கைக்கு கடத்தப்படுகின்றன என இரகசியத் தகவல் கிடைத்தது.

இந்தத் தகவலை அடுத்து



சர்வதேச கடல் எல்லை முதல் காங்கேசன்துறை கடல் வரை ரோந்து பணியில் கடற் படையினர் ஈடுபட்டு வந்தனர்.

இதன்போது, சந்தேகத்திற்கு இடமான முறையில் கடலில் நின்றிருந்த தமிழகத்தைச் சேர்ந்த நாட்டு படகைப் பிடித்து விசாரணை செய்தனர்.

இந்தப் படகில் இலங்கைக்கு சட்டவிரோதமாக தடைசெய்யப்பட்ட போதைப் பொருள்களை கடத்தி வந்தமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட ஐந்து மீனவர்களையும் காங்கேசன்துறை பொலிஸாரிடம் கடற் படையினர் ஒப்படைத்துள்ளனர்.

மேலும், கைது செய்யப்பட்டவர்களில் மூவர் மண்டபம் முகாமில் உள்ள அகதிகள் என்பது முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

# காத்தான்குடியில் 117 வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை

காத்தான்குடி,ஏப்.05

காத்தான்குடி பிரதான வீதியிலுள்ள 117 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகக் காத்தான்குடி நகரசபை தலைவர் எஸ்.எச். அஸ்பர் தெரிவித்துள்ளார்.

காத்தான்குடி பிராதான வீதியிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக கழிவுகளை வைத்து பிரதான வீதியை அசுத்தப்படுத்தும் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராகவே இந்தச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

காத்தான்குடி நகர சபையின் தலைவராக கடந்த திங்கட்கிழமை தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் அவர் இந்த அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# படையினரிடமிருந்து துப்பாக்கி பறிப்பு; சந்தேகநபர்களின் விளக்கமறியல் நீடிப்பு

முல்லைத்தீவு, ஏப். 05

முல்லைத்தீவில் படை யினரிடமிருந்து துப்பாக்கி பறிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்டனர்.

முல்லைத்தீவு ஆண்டான் குளம் பகுதியில் கடந்த 26ஆம் திகதி மரம் கடத்தப்படுகிறது என படையினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து சோதனை நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது படையினருக்கும் மரக்கடத்தலில் ஈடுபட்டவர்களுக்கும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, சந்தேகநபர்கள் படையினரின் துப்பாக்கியை பறித்துக்கொண்டு காட்டுக்குள் தப்பி ஓடியுள்ளனர். இதனையடுத்து படையினரின் துப்பாக்கி மீட்கப்பட்டதுடன், சந்தேகத்தின் பேரில் 3பேர் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி எஸ்.லெனின்குமார் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் படையினரின் பணிக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் ஆயுதம் பறிக்கப்பட்ட குற்றச் சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ள மூவரும் நீதிமன்ற வளாகத்தில் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து சந்தேகநபர்களின் விளக்கமறியலை நீடித்து மாவட்ட நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.



# தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் ஆரம்பம்!



கொழும்பு, ஏப். 05

கொழும்பு மாநகர எல்லைப் பகுதியில் தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் கொழும்பு மாநகர முதல்வர் திருமதி ரோசி சேனநாயக்க தலைமையிலும், கொழும்பு மாநகர சபை சுகா தாரத் திணைக்களம், சுகாதார அமைச்சு, ஜனாதிபதி செயலணி, சுற்றாடல் பொலிஸார், முப்படை மற்றும் சம்பந்தப்பட்ட கிராம உத்தியோ கத்தர்களின் பங்களிப்புடன் ஆரம்பமானது.

எதிர்வரும் ஒன்பதாம் திகதி வரை தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் முன்னெடுக்கப்பட வுள்ளது.

பருவ மழை ஆரம்பித்துள்ள நிலையில் நாடெங்கிலும் டெங்கு நுளம்புகள் வேகமாகப் பெருகக்கூடிய வாய்ப்பு உள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு நுளம்பு ஒழிப்புத் திட்டங் களை அமுலாக்குவது இத்திட்டத்தின் நோக்க மாகும்.

(க)

# காலியில் சுனாமி ஒத்திகை

கொழும்பு, ஏப். 05

சுனாமி ஒத்திகை நிகழ்வு ஒன்று நேற்றுக் காலை காலி வித்யா லோக வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, அனர்த்த முகாமைத் துவ மத்திய நிலையம் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் பங்களிப்பில் காலி மாவட்ட அனர்த்த முகாமைத் துவப் பிரிவின் ஏற்பாட்டில் நடந்த இந்த ஒத்திகையில் பாடசாலை யின் அனைத்தும் மாணவர்களும் பங்குபற்றினர்.

அனர்த்த முகாமைத்துவ மத் திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் எஸ். அமல





நாதன் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் தேசிய வேலைத்திட்டப் பணிப்பாளர் லொவிடா ராம் குட் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண் டனர்.

காலி கடற்கரைக்கு அருகில் அமைந்துள்ள வித்யாலோக வித்தி யாலயம் 2004 ஆம் ஆண்டு சுனாமி யின்போது கடுமையாகப் பாதிக் கப்பட்ட பாடசாலையொன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# மழலைகளின் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 05

தொல்புரம் மத்திய சனசமூக நிலைய சக்தி முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு விழா முன்பள்ளி மைதானத்தில் நாளை மறுதினம் 07 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தலைவர் ந.யசிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தின ராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொள் ளவுள்ளார் என்று ஏற்பாட்டாளர்கள் தெரி வித்துள்ளனர்.

# புதிய வரைபடத்தில் துறைமுக நகரம்



இலங்கையின் புதிய வரை படம் சுமார் 18 வருடங்களின் பின்னர் தயாரிக்கப்பட்டு வருகி றது என நில அளவையாளர் அதிகாரி உதயகாந்த தெரிவித் துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையின் புதிய வரை படம் செய்மதி உதவியுடன் தயா ரிக்கப்படவுள்ளது.

இதன் பணிகள் நிறை வடைந் ததும் அது திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் வெளியிடப்படும்.

புதிய வரைபடத்தில் இலங் கையின் துறைமுக நகரமும் உள் ளடக்கப்படவுள்ளது.

இலங்கையின் கிழக்கு மற்றும் தெற்கு கடற்கரைப் பரப்புகள் அதிகரித்துள்ளமையுடன், சிலா பம் கடற்கரைப் பரப்பு குறை வடைந்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நாடாளுமன்ற உறுப்பினர் பல பேருடனும் பெரும் தொகை 'டீல்'கள் பேசப்பட்டனவா?

## கூட்டு எதிரணி தரப்பில் பலத்த சந்தேகம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 05

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேர ணைக்கு ஆதரவாக வாக் களிப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கோடிக் கணக்கில் 'டீல்'கள் பேசப்பட் டுள்ளமை தெரிய வந்துள்ளது எனக் கூட்டு எதிரணியின் உறுப்பினர்கள் தெரிவித்துள் ளனர்.

பிரதமருக்கு எதிரான நம் பிக்கையில்லாப் பிரேர ணையை முன்வைத்த ஒன் றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற குழு, நேற்று முன்தினம் முன்னாள் ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ தலை மையில் கூடியது.

முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத் திலேயே இந்தக் குழுவின் கலந்துரையாடல் இடம் பெற் றது.

இந்தக்கலந்துரையாடலுக்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நாடாளு மன்ற உறுப்பினர்களான தினேஷ் குணவர்தன, வாசு தேவ நாணயக்கார மற்றும் விமல் வீரவன்ஸ ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர் களை பணத்திற்கு கொள் வனவு செய்யும் அரசின் முயற்சி தொடர்பில் தற்போது தகவல் வெளியாகியுள்ளது என குறிப்பிட்டனர்.

குறிப்பாக, அரசின் கடந்த வரவு-செலவுத்திட்டம் மீதான வாக்கெடுப்பின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப் பில் வாக்களித்த உறுப்பி னர்கள் 2 கோடி ரூபாவை வாங்கிய பின்னரே ஆதரவாக வாக்களித்தனர் என்று பகி ரங்கக் குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டது.

தாம் ஒருபோதும் பணம் வாங்கவில்லை என முதலில் மறுத்து வந்த கூட்டமைப்பு, பின்னர் தமது பிரதேச அபி விருத்தித் திட்டங்களுக்கா கவே அந்த பணத்தை வாங் கியதாக மழுப்பியது.

இவ்வாறான நிலையில், பிரதமருக்கு எதிரான நம் பிக்கையில்லாபிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு கோடிக்கணக்கில் பேரம் பேசப் பட்டுள்ளது எனக் கூட்டு எதி ரணியின் உறுப்பினர்கள் குற்றச்சாட்டை முன்வைத் துள்ளனர்.

ரணிலுக்கு எதிரான ஐ.தே.க. உறுப்பினர்கள் தற்போது அவருடன் திரும்பவும் ஒன்று சேர ஒத்துக் கொண்டுள் ளார்கள் என்றால், அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஏதோ நன்மைகள் இணங்கப்பட் டுள்ளன என்று தானே அர்த் தம்? இந்தக் கொடுப்பனவுகள் தனிப்பட்டவாறான நன்மையா அல்லது மக்கள் சார்பான கோரிக்கைகளுக்கு இந்த கொடுப்பனவுகளா என்பது பற்றி வெளிப்படைத் தன்மை இருப்பதில்லை என வட மாகாண முதல்வர் தெரிவித் திருந்தமையும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. (க)

# பிரதமர் ரணிலை விலக்க யாருக்கும் அருகதை இல்லை!

## 'புரவெசி பலய' அமைப்பு கூறுகிறது

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் இருந்து வெளியேறு மாறு குறிப்பிடுவதற்கு ஜனாதிபதிக்கோ அல்லது அவர் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கோ எந்தவித அருகதையும் இல்லை என 'புரவெசி பலய' என்ற பொது அமைப் புக்களின் கூட்டு தெரிவித்துள்ளது.

2015 ஆம் ஆண்டு ஜனவரி 08 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவை தோற்கடித்து ஆட்சிப் பீடம் ஏறிய தேசிய அரசுக்கு ஐக்கிய தேசியக் கட்சியே தலைமை தாங்கி யிருந்தது என்றும் பொது அமைப்புக் களின் கூட்டான 'புரவெசி பலய' அமைப்பு தெரிவித்துள்ளது.

'புரவெசி பலய' அமைப்பில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள், புத்திஜீவி கள் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற் றும் தொழில்சார் நிபுணர்கள் ஆகியோர் இணைந்து கொழும்பில் நேற்றுமுன் தினம் ஊடகச் சந்திப்பை நடத்தினர்.

இதில் கலந்துகொண்ட நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரம பாகு கருணாரத்ன, ஜனாதிபதியை கடுமையாக விமர்சித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விற்கு மக்கள் வழங்கிய வரலாற்றுக் கடமையை நிறைவேற்றுவதை விடுத்து அவர் வேறு எதனையோ செய்யமுனைகின்றார்.

பிரதமரைப் பதவி விலகுமாறு கோரு வதற்கோ அல்லது தனக்கு விசுவாச மான அடிமைகளைப் பயன்படுத்திக் கொண்டு அதற்கான அழுத்தத்தைப் பிரயோகிக்கவோ அவருக்கு எந்தவித உரிமையும் இல்லை. ஜனநாயகத் திற்கான அமைப்புக்கள், மனித உரிமை அமைப்புக்கள், தொழில்சார் நிபுணர்கள், தொழிற்சங்கங்கள், பொது அமைப்புக் கள் என அனைவரும் இணைந்தே இந்த தேசிய அரசை உருவாக்கினோம்.

அதனால், அந்தப் புரட்சிக்குத் தலைமை வகிக்கும் பொறுப்பை அவ ருக்கு வழங்கிய காரணத்திற்காக ஜனா திபதிக்கு ஜனநாயகத்திற்கான பயணத் தைத் தடுத்து நிறுத்த முடியாது.


அதேவேளை, பிரதமர் ரணிலும் இந் தக் கோரிக்கைகளுக்குச் செவிமடுத்து பதவி விலகவும் முடியாது.

அவருக்கு அதற்கு உரிமை இல்லை. பிரதமரைப் பதவி விலக்க முயல்கின் றமை மக்கள் ஜனவரி 08ஆம் திகதி மேற்கொண்ட புரட்சியை தோற் கடிப் பதற்கான சதியாகும்.

இதற்கு எவரும் துணை போகக் கூடாது. - என நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

## வினாத்தாள் 26 பகுதி I இன் தொடர்ச்சி...

- கீழேதரப்பட்டுள்ளஉருவைக் கருத்தில் கொண்டுவிடை தருக



38) அருகேயுள்ள உருவில் நிறந்தீட்டப்பட்ட சதுரத்தின் சுற்றளவு 40 cm எனின் முழு உருவத்தின் சுற்றளவு யாது?
1.100 cm
2.120 cm
3.140cm

39) முழு உருவின் பரப்பளவு நிழற்றப்பட்ட உருவின் பரப்பளவின் எத்தனை மடங்கு ஆகும் ?
1.9 மடங்கு
2.10 மடங்கு
3.8 மடங்கு

40) ஒருவன் 30 km தூரம் பயணம் செய்யவேண்டும். அதில் ½ பங்கை பேருந்திலும் மிகுதியின் 2/3 பங்கை புகையிரத்திலும் எஞ்சிய தூரத்தை சைக்கிளிலும் சென்றான். அவன் சைக்கிளில் சென்றதூரம் யாது?
1. 5 km
2. 4 km
3. 3 km





## வினாத்தாள் 26 பகுதி I இன் தொடர்ச்சி...

22) எமக்கு தகவல்களை "நேரடி"யாக வழங்கத்தக்க ஓர் ஊடகம்.
1.பத்திரிகை
2.கையேடு
3.வானொலி
4.அறிவித்தல்

23) தபால் பெட்டியில் குறிப்பிடப்பட்டிருப்பது
1.திறந்து வைத்தவரின் பெயர்
2.கடிதம் கொண்டிருக்கவேண்டிய கூடியநிறை
3.கடிதங்களை எடுக்கும் நேரம்
4.கடிதங்களை எடுக்கும் திகதி

24) செவிகளின் ஊடாகமட்டும் தகவல்களைப் பெறுவதற்காக எமக்குத் தகவல்களை வழங்கும் ஊடகம்
1.வானொலி
2.செய்தித்தாள்
3.கணினி
4. தொலைக்காட்சி

25) ஒரு குடும்பத்தில் கேசவனின் சகோதரி லதா ஆவார். லதாவிற்குச் சம எண்ணிக்கையான சகோதரிகளும் சகோதரர்களும் உள்ளனர். கேசவனிற்குச் சகோதர்களின் எண்ணிக்கையின் இரு மடங்கான சகோதரிகள் உண்டு. இக் குடும்பத்திலுள்ள பெண்பிள்ளைகள் எத்தனை?
1. 2
2. 3
3. 4

26) ஒருபூந்தோட்டத்தில் முதலில் முறையே மல்லிகை, ரோஜா, முல்லை ஆகிய மாறிமாறி நடப்படுகின்றன. அந்த வரிசையில் 20 ஆவது செடி என்ன ?
1.மல்லிகை
2.ரோஜா
3.முல்லை

27) மாலை 5.00 மணிக்கு கடற்கரையில் நடந்துகொண்டிருந்த எனக்கு எனது நிழல் எனது இடப்பக்கமாகத் தெரிந்தது. அப்படியாயின் நான் எத்திசைநோக்கி நடந்துசென்றேன்
1.வடக்கு
2.தெற்கு
3.கிழக்கு

28) ஒரு மின் அலங்காரச் சக்கரத்தில் சிவப்பு, பச்சை, மஞ்சள் என மூன்று வகையான மின்குமிழ்த் தொடர்கள் ஒழுங்கில் ஒளிர்ந்துகொண்டிருந்தன.
18 ஆவது மின்குமிழின் நிறம்
1.சிவப்பு
2.பச்சை
3.மஞ்சள்

29) அம் மின்குமிழ் தொடரில் 28 மின்குமிழ்கள் காணப்பட்டன எனின் அங்கிருந்தமின்குமிழ்களின் எண்ணிக்கை ?
1. 9
2. 10
3. 12

30) பாடசாலையின் கண்காட்சியொன்று 9 ஆம் திகதி இடம்பெற்றது. எனின் கண்காட்சி முடிவடைந்த திகதி
1. 11 ஆம் திகதி
2. 12 ஆம் திகதி
3. 13 ஆம் திகதி

31) சமதூர இடைவெளியில் நடத்தப்பட்ட மூன்றுகம்பங்களுக்கு இடையிலானதூரம் யாது?
1. 48 cm
2. 60 cm
3. 56 cm


32) எப்போதாவது நடைபெறக்கூடிய நிகழ்வு எது?
1.சூரியன் உதித்தல்
2.விண்மீன் தோன்றுதல்
3.சூரிய கிரகணம் தோன்றுதல்





33) ஐந்து ஆடுகள் ஐந்து சாக்குப் புல்லை ஐந்து நாள்களில் சாப்பிடும் ஓர் ஆடு ஒரு சாக்குப் புல்லை எத்தனை நாள்கள் சாப்பிடும்
1.25 நாள்கள்
2.5 நாள்கள்
3.1 நாள்

34) உருவிலுள்ள முக்கோணங்களின் எண்ணிக்கை



1. 9
2. 10
3. 12

35) மாணவன் பாடசாலை எனின், தாதி ......................................
1.சந்தை
2.வங்கி
3.வைத்தியசாலை

36) கப்பல் மாலுமி எனின் ஆகாயவிமானம் ..................................
1.சாரதி
2.வலவன்
3.மீகாமன்

37) நாதன் பரமுவின் அண்ணன். நாதனின் தந்தையை பரமுவின் மகள் லதா என்னமுறை சொல்லி அழைப்பாள்?
1.அப்பப்பா
2.பெரியப்பா
3.மாமா

# பாகிஸ்தானில் 10 தீவிரவாதிகளுக்குத் தூக்கு

இஸ்லாமாபாத்,ஏப்.05

பாகிஸ்தானில் 10 தீவிரவாதிகளுக்கு இராணுவ நீதி மன்றம் விதித்த மரண தண்டனையை அந்த நாட்டின் இராணுவ தளபதி ஜெனரல் கமர் ஜாவத் பஜ்வா உறுதி செய்துள்ளார்.

பாகிஸ்தானில் பல்வேறு பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டு உயிரிழப்புகளை ஏற்படுத்திய 10 பயங்கரவாதிகளுக்கு இராணுவ நீதிமன்றுகள் மரண தண்டனை விதித்தன. அந்தப் பயங்கரவாதிகள், முகமது இஸ்டாக், முகமது ரபீக், முகமது ஆரிஷ், ஹபிபுர் ரகுமான், முகமது பயஸ், இஸ்மாயில் ஷா, முகமது பசல், ஹஸ்ரத் அலி, முகமது ஆசிம், ஹபிபுல்லா ஆவார்கள்.

இவர்கள் அங்கு 62 பேரைக் கொன்று குவித்தவர்கள் என அந்த நாட்டின் இராணுவ ஊடகப்பிரிவு சொல்கிறது.

குறிப்பாக, முகமது இஸ்டாக்கும், முகமது ஆசிமும் சேர்ந்து பாகிஸ்தானின் சூபி மத இசைக்கலைஞரான அம்ஜத் சப்ரியையும், சட்ட அமுலாக்கல் பிரிவினரையும் கொன்றவர்கள் எனத் தகவல்கள் கூறுகின்றன.

எனவே 10 பயங்கரவாதிகளும் எந்த நேரத்திலும் தூக்கில் போடப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.



## துணையின் தொலைபேசியை உளவு பார்த்தால் தண்டனை



சவுதியில் புதிய சட்டம்

ரியாத்,ஏப்.05

சவுதி அரேபியாவில் துணைவரின் தொலைபேசியை உளவு பார்த்தால் அபராதத்துடன் சிறைத் தண்டனை வழங்க புதிய சட்டம் இயற்றப்பட்டுள்ளது என அரசு தெரிவித்துள்ளது.

சவுதி அரேபியாவில் பெரும்பாலான விவாகரத்து வழக்குகளில் மனைவி தனது கணவரின் தொலைபேசி உரையாடல்களை ஆதாரமாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கின்றனர். அதன் அடிப்படையில் விவாகாரத்து வழங்கப்படுகிறது.

இந்த நிலையில், கணவரின் தொலைபேசியை உளவு பார்த்தால் அபராதத்துடன் சிறைத் தண்டனை அளிக்க புதிய சட்டம் ஒன்றை சவுதி அரசு இயற்றியுள்ளது. இச்சட்டத்தின்படி தொலைபேசியை உளவு பார்ப்பது பெண்ணாக இருந்தாலும் சரி, ஆணாக இருந்தாலும் சரி அவர்களுக்கு 5 லட்சம் சவுதி ரியால் அபராதம் அல்லது ஓர் ஆண்டிற்கு மேல் சிறை தண்டனை அல்லது இரண்டும் வழங்கப்படும் என சவுதி அரசு தெரிவித்துள்ளது.

# தங்கள் நிலத்துக்கு உரிமை கொண்டாட இஸ்ரேலுக்கு முழு உரிமையும் உண்டு



### சவுதி இளவரசர் பரபரப்புப் பேட்டி

இஸ்ரேல் நாட்டு மக்களுக்கு தாங்கள் வாழும் பகுதியை தாய்நாடாகச் சொந்தம் கொண்டாடும் உரிமை உண்டு என சவுதி அரேபிய இளவரசர் முஹம்மது பின் சல்மான் தெரிவித்துள்ளார்.

ஷியா இனத்தவர்கள் பெரும்பாலாக வாழும் ஈரானுக்கும் சன்னி இனத்தவர்கள் பெரும்பாலாக வாழும் சவுதி அரேபியாவுக்கும் இடையில் நெடுங்காலமாகத் தீராப் பகை நிலவி வருகிறது.

இருப்பினும், பலஸ்தீனம் உள்ளிட்ட பிரச்சினைகளில் இருநாடுகளும் இஸ்லாமியர்களுக்கு ஆதரவான ஒருமித்த நிலைப்பாட்டைப் பேணி வருகின்றன. பலஸ்தீனத்தில் இருந்து உருவாக்கப்பட்ட இஸ்ரேல் நாட்டில் இஸ்லாமியர்களின் புனிதத்தலமான அல் அக்ஸா மசூதி அமைந்துள்ளது.

இந்த மசூதியின் பரம்பரைப் பாதுகாவலராக சவுதி மன்னர் பரம்பரை இருந்து வருகிறது. ஆனால், இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையில் தூதரக ரீதியிலான எவ்வித உறவுகளும் இல்லை. எனினும், பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையே நிலவிவரும் பகைமை நீங்கி நல்லுறவை ஏற்படுத்தும் அரபு நாடுகளின் அமைதி முயற்சிக்கு சவுதி அரேபியா கடந்த 2002ஆம் ஆண்டிலிருந்து தலைமையேற்று வருகிறது.

ஆனால், ஏமன் நாட்டில் அதிபரின் ஆட்சியை வீழ்த்துவதற்காக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஹவுத்தி கிளர்ச்சியாளர்களை மறைமுகமாக தூண்டி விடுவதுடன் ஆயுத உதவியும் செய்துவரும் ஈரான் அரசை சவுதி அரேபியா கடுமையாக எதிர்த்து வருகிறது.

ஏமன் அதிபருக்குத் தேவையான விமானப்படை உள்ளிட்ட உதவிகளை சவுதி தலைமையிலான அரபு நேசநாட்டுப் படைகள் செய்து வருகின்றன. இவ்விவகாரத்தில் சவுதிக்கு ஆதரவாக அமெரிக்காவும், இஸ்ரேலும் இருந்து வருகின்றன.

இந்த நிலையில், பிரபல அமெரிக்க பத்திரிகை ஒன்றுக்கு சமீபத்தில் பேட்டியளித்துள்ள சவுதி இளவரசர் முஹம்மது பின் சல்மான், தங்கள் நிலத்துக்கு உரிமை கொண்டாட இஸ்ரேலுக்கு உரிமை உண்டு எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அனைவருக்குமான நிரந்தரத்தன்மை மற்றும் சராசரியான உறவு ஏற்படுவதற்கு ஓர் அமைதி ஒப்பந்தத்தை நாம் உருவாக்கியாக வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## கிளர்ச்சியாளர்கள் வெளியேற்றம்:

# கூட்டாவிற்கு திரும்பிய 40 ஆயிரம் மக்கள்



மொஸ்கோ,ஏப்.05

டமாஸ்கஸ் நகரில் போர் காரணமாக கிளர்ச்சியாளர்கள் வெளியேறியமையால் உள்ளூர் மக்கள் 40 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கிழக்கு கூட்டாவுக்குத் திரும்பியுள்ளனர்.

சிரியா தலைநகர் டமாஸ்கஸ் நகரை அடுத்து அமைந்து உள்ள கிழக்கு கூட்டாதான், கிளர்ச்சியாளர்களின் பிடியில் இருந்து வந்த கடைசி முக்கியப் பகுதி ஆகும்.

அதை மீட்பதற்காக அதிபர் பார் அல் ஆசாத் படைகள் கடந்த 2 மாதங்களாக கடுமையாக சண்டையிட்டன. இதில் கிளர்ச்சியாளர்கள் வசமிருந்த இடங்களில் 95 வீதமான வற்றை அதிபரின் படைகள் மீட்டு விட்டன. இந்தப் போரில் ஆயிரத்து 600இற்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். அந்தப் பகுதியின் கடைசி இடமான டூமாவில் இருந்து கிளர்ச்சியாளர்களை பின்வாங்கச் செய்வதற்கு, அரசுக்கும், அவர்களுக்கும் இடையே ரஷ்யா சமரசம் செய்து வைத் தது.

அதன் பயனாக அங்கு இருந்து 24 மணி நேரத்தில் ஆயிரத்து 123 கிளர்ச்சியாளர்களும், அவர்களது குடும்பத்தினரும் வெளியேறினர். இதுவரை அங்கு இருந்து 2 ஆயிரத்து 269 கிளர்ச்சியாளர்களும், அவர்களது குடும்பத்தினரும் வெளியேறியுள்ளனர். இந்த நிலையில் போர் காரணமாக அங்கு இருந்து வெளியேறிய உள்ளூர் மக்கள் 40 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கிழக்கு கூட்டாவுக்குத் திரும்பி உள்ளனர்.

இந்தத் தகவலை ரஷ்ய இராணுவ அமைச்சகம் நேற்று வெளியிட்டுள்ளது.

## இங்கிலாந்து இளவரசர் பிலிப் மருத்துவமனையில் சேர்ப்பு



லண்டன்,ஏப்.05

இங்கிலாந்து ராணி எலிசபெத்தின் கணவர் இளவரசர் பிலிப் அறுவை சிகிச்சை செய்துகொள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத்தின் கணவர் இளவரசர் பிலிப். இவருக்கு இடுப்பு பகுதியில் அறுவை சிகிச்சை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என பக்கிங்காம் அரண்மனை தெரிவித்துள்ளது.

# இரு ரயில்கள் மோதலில் பலர் படுகாயம்

பெர்லின்,ஏப்.05

ஜேர்மனியில் உள்ள சுரங்கத்தில் இரு ரயில்கள் மோதிய விபத்தில் 20இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜேர்மனி நாட்டில் சுரங்க ரயில் சேவை செயற்பட்டு வருகிறது. ஜேர்மனி நாட்டின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள டூயிஸ்பார்க் நகரில் சுரங்க ரயில்கள் மோதியதில் விபத்து ஏற்பட்டது.




இந்த விபத்தில் 20இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். அதில் இருவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. படுகாயம் அடைந்த பயணிகளை மீட்டு அருகிலுள்ள மருத்துவமனைகளில் சேர்த்து சிகிச்சை அளித்து வருகின்றனர். ரயில்கள் மோதி ஏற்பட்ட விபத்துப் பற்றி அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir



# மோடியின் சாயம் வெளுத்து வருகிறது: ராகுலுக்கு அரசியல் முதிர்ச்சி இல்லை

## தேவகவுடா கடும் தாக்கு



பெங்களூர், ஏப்.05

கர்நாடகாவில் சட்டசபைத் தேர்தலை யொட்டிப் பிரதமர் மோடி மற்றும் ராகுல் காந்தி ஆகிய இருவரையும் மத சார்பற்ற ஜனதா தளத் தலைவர் தேவ கவுடா கடுமையாகத் தாக்கிப் பேசியுள் ளார்.

முன்னாள் பிரதமரும், மதசார்பற்ற ஜனதா தள தலைவருமான தேவக வுடா நிருபர்களுக்கு அளித்த பேட்டி யில் கூறியவை வருமாறு:-

10 ஆண்டு காங்கிரஸ் கூட்டணி அரசு செய்த சில தவறுகளால் மோடி ஆட்சிக்கு வந்துவிட்டார். பல கட் சிக் கூட்டணி ஆட்சி மீது அன்றைய சூழ்நிலையில் மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டு விட்டது. ஆனால் இந்தி யாவை பொறுத்தவரை பல கட்சிக் கூட்டணி ஆட்சிதான் தேவை. நாட்டின் நலனுக்காக மதசார்பற்ற அணிகளோடு கைகோத்து செயற் படுவேன்.

தற்போது பிரதமர் மோடியின் சாயம் வெளுத்து வருகிறது. அவர் கடந்த 4 ஆண்டுகளாக மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளிலும், விவசாயிகளுக்கு எதிராக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகிறார். அவருடைய பேச்சு இனி மக்களிடம் எடுபடாது.

ராகுல்காந்தியைப் பொறுத்தவரை யில் அரசியல் முதிர்ச்சி இல்லாமல் பேசுகிறார். யாராவது சொல்லிக் கொடுப்பதை கிளிப்பிள்ளை போல அவர் சொல்கிறார். அவருக்குச் சரியாக வரலாறு தெரியாது. கர்நாடகாவின் நிலைமை என்ன என்பதை அவர் அறிந்திருக்கவில்லை.

லிங்காயத் சமூகப் பிரச்சினையில் மாநில காங்கிரஸ் அரசு கர்நாடக மக் களை பிரித்தாளும் முறையை கையா ளுகிறது. இது தவறான போக்கு. காங் கிரஸ் மீது எனக்கு நம்பிக்கை இல்லை. அவர்கள் எப்போதுமே பயன்படுத்தி விட்டு தூக்கி எறிவதை வழக்கமாக கொண்டுள்ளனர். ஆனாலும் தேர்த லுக்கு பிறகு அவர்கள் எங்களை நாடி வரும் சூழ்நிலை ஏற்படலாம்- என்று தெரிவித்துள்ளார்.

## ரஜனியின் கட்சிப் பெயர் வெகுவிரைவில் அறிவிப்பு



ரஜனி புதிய கட்சியின் பெயரை மே மாதம் அறிவிப்பார் என்று தெரிகிறது. இது தொடர்பான அறிவிப்பு விரைவில் வெளியாகவுள்ளது.

அரசியல்பயணத்தைதொடங்கியுள்ள நடிகர் ரஜனிகாந்த், தமிழகம் முழுவ தும் தனது ரசிகர் மன்றங்களை வலுப் படுத்தும் பணியை முடுக்கிவிட்டுள்ளார்.

இந்த நிலையில் ரஜனி புதிய கட் சியை விரைவில் அறிவிக்கவுள்ளார். எதிர்வரும் 14ஆம் திகதி தமிழ்ப் புத் தாண்டு தினத்தில் புதிய கட்சியின் பெயரை ரஜனி அறிவிப்பார் என்று எதிர் பார்க்கப்பட்டது. இமயமலைப் பய ணத்தை முடித்து விட்டுச் சென்னை திரும்பியதும் ரஜனி காந்த் இதனை மறுத்தார். அது போன்ற எந்த திட்டமும் இல்லை என்று அவர் அறிவித்துவிட்டார்.

இருப்பினும் மே மாதம் ரஜனி புதிய கட்சியின் பெயரை அறிவிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## ஜார்க்கண்டில் 5 மாவோயிஸ்டுகள் சுட்டுக்கொலை



ஜார்க்கண்ட் மாநிலம் லேட்கர் மாவட்டத் தில் பாதுகாப்புப் படையினருடனான துப்பாக்கிச் சண்டையில் ஐந்து மாவே யிஸ்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சத்தீஸ்கர், ஜார்கண்ட் மாநிலத்தில் நக்சலைட்கள் மற்றும் மாவோயிஸ்ட்க ளின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது. பணக் காரர்கள் மற்றும் அரசியல் செல்வாக்கு மிக்கவர்களை குறிவைத்துத் தாக்குதல் நடத்திவரும் இந்தக் குழுவினர் அவ்வப் போது பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினரையும் தாக்கிக் கொல்கின்றனர்.

இந்த நிலையில், ஜார்கண்ட் மாநிலம் லேட்கர் மாவட்டத்தில் உள்ள சிரந்தாக் காட்டுப்பகுதியில் பாதுகாப்புப் படை யினர் நேற்றுக் காலை தேடுதல் வேட்டை யில் ஈடுபட்டனர். அப்போது பாதுகாப்புப் படையினருக்கும் மாவோயிஸ்டுகளுக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடந்தது. இந்த துப்பாக்கிச்சண்டையில் ஐந்து மாவோயிஸ்டுகள் சுட்டுக் கொல்லப்பட் டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பெண்கள் ஜீன்ஸ் அணிந்தால் திருநங்கை குழந்தை பிறக்கும்



பேராசிரியர் பேச்சால் சர்ச்சை

கேரளாவைச் சேர்ந்த கல்லூரி பேராசிரியர் பெண்கள் பற்றிப் பேசிய விடயம் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

கேரளா கல்லடியில் உள்ள கல்லூரியில் பேராசிரியராக பணி புரிபவர் ரஜித்குமார். இவர் அண் மையில் நடந்த நிகழ்ச்சியில் பேசினார்.

அப்போது, ஒரு பெண், ஆண் போல உடையணிந்தால் அவ ருக்குப் பிறக்கும் குழந்தை எப்படி யிருக்கும்? நிச்சயம் திருநங்கை குணம் கொண்டதாகவே இருக் கும் எனப் பேசியுள்ளார்.

மேலும், கேரளாவில் ஏற்கனவே 6 லட்சம் திருநங்கைகள் உள்ளார் கள், இப்போது இங்குள்ள பெண் கள் எல்லாம் ஜீன்ஸ் உடை அணிந் தால் திருநங்கை குணமுடைய குழந்தைகள்தான் பிறக்கும், இது போன்ற பெண்களுக்கு ஓட்டிசம் பாதிப்புள்ள குழந்தைகள் பிறக்க வும் வாய்ப்புள்ளது என அதிர்ச்சி தரும் வகையில் இவர் பேசி யுள்ளார்.

இப்படி மோசமாகப் பேசிய ரஜித் குமார் மீது வழக்குத் தொடர அம் மாநில அரசு முடிவு செய்துள் ளது எனத் தகவல் வெளியாகியுள் ளது.

## மத்திய அரசைக் கண்டித்து தி.மு.கவினர் உண்ணாவிரதம்



காவிரி மேலாண்மைச் சபையை அமைக்காத மத்திய அரசைக் கண்டித்து சென்னையில் தி.மு. கவினர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டு பேசிய தி.மு.கவின் எம்.எல்.ஏ. ஜெ.அன்பழகன், காவிரி விவகாரத்தில், அ.தி.மு.கவுடன் இணைந்து செயற்படத் தி.மு.க. தயா ராக உள்ளது. ஆனால் அ.தி.மு.க வினர் தனித்துப் போராட்டம் நடத்து கின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், இன்று மீண்டும் காவிரிப் பிரச்சினை பற்றி விவாதிக்க தி.மு.க. தலைமையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற இருப்பதாக மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மத்திய பிரதேசத்தில் 5 சாமியார்களுக்கு அமைச்சர் அந்தஸ்து



மத்திய பிரதேசத்தில் 5 சாமியார் களுக்கு மாநில இணை அமைச்சர் அந்தஸ்து வழங்கப்பட்டது. இதற்குக் காங்கிரஸ் கண்டனம் தெரிவித்துள்ளது.

ம.பியில் உள்ள கம்யூட்டர் பாபா, நர்மதானந்த் மகாராஜ், ஹரிஹரநாத் மகாராஜ், பயு மகா ராஜ் மற்றும் பண்டிட் யோகேந்திர மகந்த் ஆகியோருக்கு மாநில இணை அமைச்சர் அந்தஸ்து வழங் கப்பட்டுள்ளது.

நர்மதை நதி பாதுகாப்புக் குழு வில் சிறப்பாகச் செயற்பட்டமைக் காக இந்த அந்தஸ்து வழங்கப்பட் டுள்ளது என மாநில அரசு கூறி யுள்ளது. அந்தக் குழுவில் 5 பேரும் கடந்த மாதம் தான் நியமனம் செய் யப்பட்டனர். இது அந்த மாநிலத் தில் சர்ச்சையை ஏற்படுத்தியுள் ளது.

# அ.தி.மு.க. உண்ணாவிரதம் போலியானது

## கமல் சாடல்



காவிரி விவகாரத்தில் அ.தி.மு.க வினர் நடத்திய உண்ணாவிரதப் போராட்டம் போலியானது என, மக்கள் நீதி மய்யக் கட்சியின் தலைவர் கமலஹாசன் விமர்சித்துள்ளார்.

உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி 6 வாரத்திற்குள் காவிரி மேலாண்மை சபை அமைக்கப்படும் என்ற நம்பிக் கையில் இருந்தோம். ஆனால், 2016 இல் 4 வாரத்திற்குள் காவிரி மேலாண் மை சபை அமைக்க வேண்டும் என்ற உச்சநீதிமன்றத் தீர்ப்பு எவ்வாறு சாக்குப்போக்குக் காட்டி தாம திக்கப் பட்டதோ அதேபோன்ற நாடகம் இப்போதும் அரங்கேறிக் கொண்டி ருக்கிறது.

காவிரி மேலாண்மை சபை அமைப் பது மத்திய அரசின் கடமை, ஆனால், தமிழக அரசு நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடர்ந்தோ, போலியான உண்ணாவிரதம் இருந்தோ தன்னு டைய இயலாமைகளை மறைக்க முடியாது. மாநில உரிமைகளுக்கு குரல் கொடுக்காமல் மத்திய அர சின் எடுபிடிகள் போன்று தமிழக அரசு நடந்துகொண்டிருக்கிறது.

திருச்சியில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் காவிரிப் பிரச்சினை பற்றி விவாதிப்போம். அதுமட்டு மல்லாமல் காவிரிப் பிரச்சினைக்கான தீர்வையும் முன்னெடுப்போம் என்று தெரிவித்துள்ளார்.

*கராச்சி ரி-20*

# பாகிஸ்தான் அணி 3:0 என கைப்பற்றி அசத்தல்



மேற்கிந்தியத்தீவு அணிக்கு எதிரான மூன்றாவது ரி-20 போட்டியில் பாகிஸ்தான் அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 3:0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

பாகிஸ்தான் சென்றுள்ள மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் அணி மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடியது. கராச்சியில் உள்ள தேசிய கிரிக்கெட் மைதானத்தில் நடந்த இரு போட்டிகளிலும் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்று 2:0 என முன்னிலை பெற்றது.

இந்த நிலையில், மூன்றாவது ரி-20 போட்டி நேற்று நடைபெற்றது. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத்தீவு அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. இறுதியில் அணி 20 ஓவரில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 153 ஓட்டங்கள் எடுத்தது.

இதையடுத்து, 154 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களாக பக்கர் ஜமான், பாபர் அசாம் ஆகியோர் களமிறங்கினர்.

ஜமான் அதிரடியாக ஆடினார். அவர் 17 பந்துகளில் 2 சிக்ஸர், 6 பவுண்ரியுடன் 40 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். பாபர் 40 பந்தில் 6 பவுண்ரியுடன் 51 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த வீரர்கள் விக்கெட் விழாமல் பார்த்துக் கொண்டனர். இறுதியில், 16.5 ஓவரில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 154 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் வெற்றி பெற்றது. உசேன் தலாட் 31 ஓட்டங்களுடனும், ஆசிப் அலி 25 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பாகிஸ்தான் அணி 3:0 என்ற கணக்கில் மேற்கிந்தியத்தீவு அணியை வென்று தொடரையும் கைப்பற்றியது.



# மேன்முறையீடு செய்ய மாட்டேன்

## ஸ்டீவன் ஸ்மித்

பந்தைச் சேதப்படுத்திய விவகாரத்தில் தனக்கு விதிக்கப்பட்டுள்ள ஓராண்டு தடையை எதிர்த்து மேன்முறையீடு செய்ய மாட்டேன் என ஸ்டீவன் ஸ்மித் கூறியுள்ளார்.

பந்தைச் சேதப்படுத்திய சர்ச்சையில் சிக்கிய ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் ஸ்டீவன் ஸ்மித், டேவிட் வோர்னர் ஆகியோருக்குத் தலா ஓராண்டும், இளம் வீரர் கேமரூன் பான்கிராப்டுக்கு 9 மாதங்களும் விளையாடத் தடை விதிக் கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை குறைக்க வேண்டும் என ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் சங்கத் தலைவர் கிரேக் டையர் அந்த நாட்டு கிரிக்கெட் சபைக்குக் கோரிக்கை விடுத்துள்ளார். மேலும் உள்ளூர் போட்டிகளில் அவர்களை விரைவில் விளையாட அனுமதிப்பது பற்றிப் பரிசீலிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த நிலையில் ஸ்மித் டுவிட்டரில் கூறியிருப்பதாவது:-

இந்த சம்பவத்தை என்றும் மனதில் வைத்திருப்பேன், எனது நாட்டிற்காக மீண்டும் விளையாடுவேன். ஆனால் அணியின் கப்டனாக முழுப் பொறுப்பையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். தடையை எதிர்த்து மேல்முறையீடு செய்யமாட்டேன். அவை ஓர் அழுத்தமான செய்தியைக் கூற ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையால் கொடுக்கப்பட்டது. நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். - என்றார்.

# அதிக பந்துகள் வீசி அண்டர்சன் சாதனை



டெஸ்ட் கிரிக்கெட்டில் 30 ஆயிரத்திற்கும் அதிகமான பந்துகளை வீசி ஜேம்ஸ் அண்டர்சன் உலக சாதனை படைத்துள்ளார்.

இங்கிலாந்து அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன். டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்திய முதல் இங்கிலாந்து வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். பல்வேறு சாதனைகளைப் படைத்துள்ள இவர் தற்போது, டெஸ்ட் போட்டியில் அதிக பந்துகளை வீசிய முதல் வேகப்பந்து வீச்சாளர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

இதற்கு முன் மேற்கிந்தியத்தீவு அணியின் கார்ட்னி வால்ஷ் 30ஆயிரத்து 19 பந்துகள் வீசி சாதனை படைத்திருந்தார். வால்ஷ் கிரிக்கெட்டில் 519 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். அண்டர்சன் நியூஸிலாந்திற்கு எதிரான 2ஆவது டெஸ்டில் 50 ஓவர்கள் வீசினார். இதன்மூலம் 30ஆயிரத்து 74 பந்துகள் வீசி வால்ஷ் சாதனையை முறியடித்துள்ளார். அண்டர்சன் 136 டெஸ்களில் 531 விக்கெட்டுக்கள் வீழ்த்தியுள்ளார்.

ஒட்டுமொத்தமாக முத்தையா முரளீதரன் அதிக பந்துகள் வீசி முதல் இடத்தில் உள்ளார். இவர் 44ஆயிரத்து 39 பந்துகள் வீசி 800 விக்கெட்டுக்கள் சாய்த்துள்ளார்.



# மும்பையில் சென்னை சுப்பர் கிங்ஸ் வீரர்கள்

ஐ.பி.எல். 20 ஓவர் தொடரையொட்டி சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வீரர்கள் பயிற்சியை முடித்துக் கொண்டு நேற்று மும்பை புறப்பட்டுச் சென்றனர்.

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் 2 ஆண்டுகளுக்கு பிறகு திரும்பியுள்ள சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, எழுச்சியுடன் தயாராகி வருகிறது. சென்னை சேப்பாக்கம் ஸ்டேடியத்தில் கப்டன் டோனி, துணை கப்டன் சுரேஷ் ரெய்னா மற்றும் சக வீரர்கள் கடந்த 10 நாள்களாக தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் பயிற்சியை முடித்துக் கொண்டு சென்னை சுப்பர் கிங்ஸ் வீரர்கள் நேற்று மும்பைக்குப் புறப்பட்டுச் சென்றனர். விமான நிலையம் மற்றும் விமானத்தில் இருப்பது போன்ற புகைப்படங்களை அந்த அணி வீரர்கள் டுவிட்டரில் வெளியிட்டுள்ளனர்.

சென்னை சுப்பர் கிங்ஸ் மும்பையில் 7ஆம் திகதி நடக்கும் தொடக்க ஆட்டத்தில் நடப்புச் சம்பியன் ரோகித் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

## நாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குகளுடன் ஐக்கியதேசியக்கட்சிநம்பிக்கையில்லாப் பிரேரணையில் வெற்றி பெறக் கூடாது என ஜனாதிபதி கூறியுள்ளார் என்று வதந்திகள் பரவியுள்ளன என பிமல் ரத்நாயக்க எம்.பி. சுட்டிக்காட்டினார். இதுவும் இன ரீதியான நோக்கத்தில் கூறப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் உரையாற்றிய சிலர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் பெயரைக் குறிப்பிட்டுகருத்துக்களை முன்வைத்துள்ளனர். இது இன ரீதியான பதற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்களாகும்.

பிரேரணையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்களிப்பது பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன? ஏன் தமிழ் மக்களுக்கு இவ்வாறான செயற்பாடுகளில் பங்கெடுப்பதற்கு ஜனநாயக உரிமை இல்லையா? ஜனாதிபதி அப்படிக் கூறியிருந்தால் இந்தக் கேள்வியை அவரிடம் முன்வைக்கின்றேன். நீங்கள் மாத்திரம் தமிழ் மக்களின் வாக்குகளுடன் வெற்றிபெறலாம்,ஐதேக மாத்திரம் பெற்றிபெற முடியாதா எனக் குறிப்பிட்ட அமைச்சர் ஜனாதிபதியிடம் கேட்டதாகவும் அந்த வதந்தியில் சொல்லப்படுகிறது. ஜனாதிபதி அப்படிச் சொல்லியிருக்கமாட்டார் என நம்புகின்றேன். சகல விடயங்களும் சிங்கள மற்றும் பௌத்தத்தை அடிப்படையாகக் கொண்டு சிந்திக்கப்படுமாயின் நாட்டுக்கு விமோசனம் கிடையாது.

ஊழலுக்கு எதிராகப் போராடுவதற்கு இந்த அரசு மக்கள் ஆணையைப் பெற்றுள்ளது. 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது மிகவும் முக்கியமாகப் பேசப்பட்ட விடயம் ஊழல் மோசடி ஆகும். இதனாலேயே பொது வேட்பாளராகக் களமிறங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மக்கள் ஆதரவு வழங்கியிருந்தனர். பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் ஊழலை ஒழிப்பது உள்ளிட்ட மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு பொது வேட்பாளருக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்தன. அதன் பின்னர் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இரு பிரதான கட்சிகளும் இணைந்து தேசிய அரசை அமைக்கத் தீர்மானித்தன. எனினும், ஐ.ம.சு.முவின் சில உறுப்பினர்கள் எதிரணியில் இருப்பதற்குத் தீர்மானித்தனர். இவ்வாறு எதிரணியில் அமர்ந்துள்ள உறுப்பினர்கள் தமது கட்சியின் தலைவருக்கு மக்கள் வழங்கிய ஆணைக்கு எதிராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப்பிரேரணையைக்கொண்டு வந்துள்ளனர். இது தேசிய அரசை இல்லாமல் செய்வதற்கான முதலாவது குறியாகும். இரண்டாவது சபாநாயகர் இலக்கு வைக்கப்படுவார். அதன் பின்னர் ஜனாதிபதிக்கு எதிராகக்குற்றவியல்பிரேரணை கொண்டுவரப்படும். இதுவே அவர்களின் நோக்கமாகவுள்ளது.

அதேநேரம், அடிப்படைச் சட்டமான அரசமைப்பு சகலராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகத் தயாரிக்கப்பட வேண்டும். இது சகல மக்களின் இணக்கப்பாட்டுடன் தயாரிக்கப்படுவதுடன், சர்வஜன வாக்கெடுப்புக்கும் உட்படுத்தப்பட வேண்டும்எனநாம்வலியுறுத்தி வருகின்றோம். சகலரின் ஒட்டுமொத்த அங்கீகாரத்துடன் அரசமைப்புச் சபை உருவாக்கப்பட்டு, 76 தடவைகள் வழிநடத்தல் குழு கூடி அரசமைப்பு தயாரிப்பு பற்றி ஆராய்ந்துள்ளது. இந்தச் செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும்.

மூன்று மாதத்துக்குள் புதிய அரசமைப்பு ஏற்றுக் கொள்ளப்படும் என பிரதமர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உறுதியளித்திருப்பதாக விமல் வீரவன்ஸ சில நிமிடங்களுக்கு முன்னர் கூறினார். அப்படி உறுதிமொழி வழங்குவதில் என்ன தவறு உள்ளது. அரசமைப்பை உருவாக்கும் பிரேரணைக்கு நாடாளுமன்றம் ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியுள்ள நிலையில், பிரதமர் அப்படியான உறுதிமொழி வழங்குவதில் என்ன தவறு உள்ளது? மூன்று மாதத்துக்குள் அரசமைப்பு அங்கீகரிக்கப்படுமாயின் அதற்கு நீங்கள் மகிழ்ச்சியடையவேண்டும். எவரும் பின்னால் சென்று அரசமைப்பைத் தயாரிக்கவில்லை. எனவேதான், அரசமைப்புநாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டாலும் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் அங்கீகரிக்கப்படவேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறது.

இவ்வாறான நிலையில் நாம் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றோம். கடந்த மூன்று வருடங்களில் அரசின் செயற்பாடுகளில் மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். அரசின் பாதை தொடர்பில் பிரச்சினையில்லாவிட்டாலும் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் பல விடயங்கள் நிறைவேற்றப்படவில்லை. அரசு பயணிக்கும் பாதை சற்று மாறியுள்ளபோதும் முன்நோக்கிநகர்ந்து வருகிறது. மிகவும் மெதுவாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதால் அது தெரிவதில்லை. இது எமது மக்களின் வாழ்க்கையை வெகுவாகப் பாதித்துள்ளது. தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம்இழுபட்டுவருகின்றது. 20 வருடங்களுக்கு மேலாகப் பலர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்து ஏறத்தாழ ஒன்பது வருடங்கள் ஆகியுள்ளன. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை மீளப்பெற்று புதிய சட்டத்தை கொண்டு வருவதாக அரசு உறுதியளித்துள்ளது.

இது மாத்திரமன்றி வடக்கு, கிழக்கில் தென்பகுதியிலிருந்து பலர் நியமிக்கப்படுகின்றனர். குறிப்பாகச் சிறு சிறு பதவிகளுக்குக் கூட சிங்களம் பேசும் நபர்கள்நியமிக்கப்படுகின்றனர். இதுபோன்ற பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும். – என்றார்.

## வீரவன்ஸ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஏனைய கட்சிகள் பிளவடைந்து செயற்படுவதைப் பார்த்து நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

– இவ்வாறு கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றிகொள்ளலாம். ஆனால் பொதுத் தேர்தலில் மண் கவ்வுவது உறுதி – என்றார். (ஐ)

## சு.கவுக்குள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஜனாதிபதி செயலகத்தில் எடுத்த முடிவை சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஏ.எச்.எம்.பௌசி அறிவித்தார்.

ஆயினும், அந்த முடிவுக்கு எதிராக சு.க. உறுப்பினர்கள் சிலர் செயற்பட்டனர் என கூறப்பட்டது.

பிரதமர் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்க விலக வேண்டும் என்றும், இல்லையேல், நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குஆதரவாகவாக்களிக்கப் போவதாகவும் சுதந்திரக் கட்சிமுன்னர்எச்சரித்துவந்தது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமிழ், முஸ்லிம் கட்சிகள் ஆதரவை வெளிப்படுத்திய நிலையில், சுதந்திரக் கட்சி நேற்றுக் காலைதிடீரெனக் குத்துக்கரணம் அடித்துள்ளது.

சுதந்திரக் கட்சியின் இந்த முடிவினால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்ஆதரவின்றியே நம்பிக்கையில்லாப்பிரேரணை தோற்கடிக்கப்படும் சூழல் எழுந்தது. (ஐ)

## மஹிந்தவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நாடாளுமன்றில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டுஉரையாற்றியபோதே சரத் பொன்சேகா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மஹிந்தவின் உடம்பில் இனவாதமே குடிகொண்டுள்ளது. இதனால்தான் சர்வதேசரீதியில் ராணுவத்தினருக்கு அவமானம் ஏற்பட்டுள்ளது.

தாம் பெரும்பான்மையினரின் ஆதரவுடனேயே வெற்றி பெற்றதாகவும் சிறுபான்மை மக்களே ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளித்ததாகவும் கூறிய மஹிந்த, முஸ்லிம்களின் ஆதரவை வெல்வதற்கு இறுதி நேரத்தில் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை.

மஹிந்தவின் காலத்தில் தேசிய சமாதானத்தைப் பற்றிப் பேசவே இல்லை. தற்போது அதைப் பற்றி பேசுவது விந்தையாக இருக்கின்றது. – என்றார். (ஐ)

## 25 பரா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) குள் இருந்து 25 பரா குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் காலை கேப்பாபிலவு மேற்குப் பகுதியில் உள்ள வீதி ஓரமாக விடுவிக்கப்பட்ட காணி ஒன்றுக்குள் விறகு வெட்டச் சென்ற நபர் ஒருவர் நிலத்தில் மறைந்து கிடந்த குண்டுகளை இனம் கண்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் முள்ளியவளைப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தார். பொலிஸார் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் அனுமதி கோரினர். நீதிமன்ற அனுமதியுடன் சிறப்பு அதிரடிப்படையினர் பரா குண்டுகளை மீட்டுள்ளனர்.

25 பரா குண்டுகளே இவ்வாறு மீட்கப்பட்டன என்றும், இவற்றை நேற்றுப் பாதுகாப்பான ஒரு பகுதியில் வைத்து தகர்த்து அழித்ததாகவும் சிறப்பு அதிரடிப்படையினர் தெரிவித்தனர். (ஐ)

## ரயிலுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) 17 வயது பாடசாலை மாணவனொருவன் உயிரிழந்துள்ளார்.

கற்குழியில் வசித்து வரும் சுபலோசன் என்ற மாணவன் நேற்று முன்தினம் குடும்பத்தாருடன் ஏற்பட்ட சிறு கருத்து முரண்பாட்டை அடுத்து வீட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ளார்.

பின்னர் வவுனியா – தேக்கவத்தைப் பகுதியில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தபால் ரயிலில் மோதுண்டு விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

இவர் சில தினங்களாகத் தற்கொலைக்கு முயற்சித்தார் என இவரின் நண்பர்கள் தெரிவித்தனர்.

பிரேத பரிசோதனைக்காகச் சடலம் தற்போது வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை வவுனியாப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## நல்லூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நல்லூர் பிரதேச சபைக்கான முதலாவது சபை அமர்வு உள்ளூராட்சி ஆணையாளர் மா. பற்றிக் டிரஞ்சன் தலைமையில் நேற்றுக் காலை கூடியது.

தலைவர் தெரிவுக்காக உறுப்பினர்களைப் பிரேரிக்குமாறு கோரப்பட்டபோது , தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் த. தியாகமூர்த்தி பிரேரிக்கப்பட்டார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி க.வாசுகி பிரேரிக்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து வாக்களிப்பு மூலம் தவிசாளர் தெரிவு இடம்பெறுமெனஆணையாளர் அறிவித்து , வாக்களிப்பு இரகசிய முறையிலா பகிரங்க முறையிலையா?நடைபெறவேண்டும் என உறுப்பினர்களிடம் கேட்டபோது , பகிரங்க வாக்களிப்பு நடைபெற வேண்டும் எனப் பெரும்பான்மையான உறுப்பினர்கள் கோரியதை அடுத்துப் பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பிரேரித்த த. தியாகமூர்த்தி 12 வாக்குகளையும் , தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பிரேரித்த க. வாசுகி 7 வாக்குகளையும் பெற்றுக்கொண்டனர்.

அதனை தொடர்ந்து துணைத் தலைவர் தெரிவின் பாது , தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஜெயகரனை பிரேரித்தது. வேறு பெயர்கள் பிரேரிக்காத நிலையில் துணைத் தலைவராக ஜெயகரன் தெரிவானார். (ஐ–7)

## கைவிடப்பட்டுள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பொலிஸார் மீட்டுள்ளனர்.

தலைமன்னார் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலை அடுத்து துரித கதியில் செயற்பட்ட தலைமன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தலைமையிலான பொலிஸ் குழுவினர், நேற்றுக் காலை நடுக்குடாப் பகுதியில் ஒருதொகுதிவெடிபொருள்களை மீட்டுள்ளனர்.

நடுக்குடாப் பகுதியில் கைவிடப்பட்ட குறித்த கடற்படை முகாமை சோதனையிட்டபோது ரி56 ரகத் துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் 1,405 ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த ரவைகள் எப்படி வந்தது என்பது தொடர்பில் தலைமன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## 12 விடயங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனுக்கு நேற்று எழுத்தில் உறுதி அளித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

இரண்டு பக்கங்களில் பன்னிரண்டு அம்சங்கள் அடங்கிய இந்த உறுதி மொழிப் பத்திரம் நேற்று மாலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் எல்லா எம்.பிக்களுக்கும் வாசித்துக் காட்டப்பட்டது.

★ தீர்வு முயற்சிகள் துரிதப்படுத்தப்படும். புதிய வருடப் பிறப்புக்குப் பின்னர் அரசியல் பேரவை மீண்டும் கூட்டப்பட்டு விடயங்கள் வேகமாக முன்நகர்த்தப்படும்.

★ அரசியல் கைதிகளை விரைந்து விடுவிப்பதற்கான திட்டம் ஒன்று கூட்டமைப்பின் இணக்கத்தோடு வரையறை செய்யப்பட்டு, முன்னெடுக்கப்படும்.

★ வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டங்களுக்குத் தீர்வு காணும் வகையில் காணாமற் போனோர் விடயங்களைக் கையாளும் அலுவலகங்கள் வடக்கு, கிழக்கில் –யாழ்ப்பாணத்திலும் பிற இடங்களிலும் – அமைக்கப்படும். விரைந்து அவை நடவடிக்கை எடுத்து காணாமல் போனோர் சம்பந்தமான விவகாரங்களுக்கு முடிவு கட்டும். நீதி நிலை நாட்டப்படும்.

★வடக்கு, கிழக்குப் பிரதேச மாவட்டங்களில் உள்ள அரச வேலை வாய்ப்புக்களுக்கு வெளியாள்கள் நியமிக்கப்பட மாட்டார்கள். அந்தந்த மாவட்டங்களுக்குக்கே முன்னுரிமை அளிக்கப்படும்.

★ மன்னார் போன்ற தமிழ்ப் பிரதேசங்களில் அரச அதிபர் முதலிய நிர்வாக அதிகாரிகள் நியமனத்தில் தமிழர்களுக்கு முக்கிய இடமளிக்கப்படும்.

★ இராணுவத்தின் வசம் இருக்கும் தனியார் காணிகள், அரச பண்ணைகள் விடுவிக்கப்படும். அந்தப் பண்ணைகளைச் சம்பந்தப்பட்ட மாகாண சபை பொறுப்பேற்று நடத்தும்.

★ பயங்கரவாதத் தடைச் சட்டத்தை வேகமாக நீக்கிப் புதிய சட்டத்தைக் கொண்டுவருதல்.

– இவை உட்பட பன்னிரண்டு அம்சங்கள் அடங்கிய உறுதிப்பத்திரமே பிரதமர் ரணிலினால் சம்பந்தனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த உறுதியுரையின் அடிப்படையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதற்குத் தமிழ்க் கூட்டமைப்பு முடிவெடுத்தது.

நேற்று முன்தினம் நாடாளுமன்றக் கட்டடத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் சம்பந்தன் தலைமையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த போது அவர்களால் தெரிவிக்கப்பட்டவிடயங்களைக் கவனத்தில் எடுத்தே இந்த உறுதியுரையை ரணில் வழங்கினார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## கடற்கரையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கம்பர்மலையைச் சேர்ந்த துரைசிங்கம் அருந்தவம் (வயது –76) என்ற வயோதிப மாதுவே சடலமாக மீட்கப்பட்டார் என அவரது மகள் அடையாளம் காட்டினார்.

வீட்டில் அவரும் மகளும் பேரப்பிள்ளைகளுமே இருந்தனர். மகள் வெளியில் சென்று திரும்பியபோது, தாயாரைக் காணவில்லை. சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்றது. இந்த நிலையிலேயே அவர்சடலமாகமீட்கப்பட்டுள்ளார். (ஐ –7)

# ஜனாதிபதியை வீழ்த்துவதற்கு பிரதான தடையாக ரணில்; இதன் காரணமாகவே நம்பிக்கையில்லாப் பிரேரணை!

கொழும்பு, ஏப். 05

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வீழ்த்துவதற்கு பிரதான தடையாக இருப்பவர் ரணில் விக்கிரமசிங்க அதன் காரணமாகவே நம்பிக்கையில்லாப்பிரேரணையைக்கொண்டு வந்து பிரதமரை நீக்குவதே சதியாகும் என நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நான் சுதந்திரக் கட்சியில் இருக்கும்போது 1999 ஆம் ஆண்டு ரணிலால் முடியாது என்ற கருப்பொருளை உருவாக்கினோம். இதன்படி நானும் டலஸ் அழகப்பெரும, மஹிந்தானந்த அளுத்கமகே ஆகியோர் நாடுபூராகவும் சுவரொட்டி ஒட்டினோம்.

ஆனாலும் ரணிலால் முடியாது என்பதன் கருத்து ரணிலால் எதுவும் முடியாது என்பதல்ல. அப்போது எமக்கு அரசியலில் இருந்த பிரதான சவால் வேறு யாரும் இல்லை அது ரணில் விக்கிரமசிங்க ஆவார்.

அதன்பின்னர் தற்போது 20 வருடங்களுக்குப் பின்னர் கூட அதே கருப்பொருள்தான் உள்ளது. எனவே அப்போதும் தற்போதும் எதிர்க்கட்சியினருக்கு ரணில் விக்கிரமசிங்கவே பிரதான சவாலாவார்.

இதன்படி நம்பிக்கையில்லா பிரேரணைதோற்கடிக்கப்பட்டு விட்டது. எனினும் இந்த நம்பிக்கையில்லா பிரேரணை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இலக்குவைத்தே கொண்டு வரப்பட்டுள்ளது.



## அமைச்சர் மங்கள சமரவீர சபையில் தெரிவிப்பு

ஏனெனில், ஜனாதிபதியை வீழ்த்துவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஐக்கிய தேசியக் கட்சியுமே தடையாக உள்ளனர். இதன்படியே நம்பிக்கையில்லா பிரேரரணை கொண்டு வரப்பட்டுள்ளது.

அத்துடன், மத்திய வங்கி மோசடி தொடர்பில் விசாரணையை ஆரம்பித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே உரிய நடவடிக்கையை எடுத்தார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போன்று கோப் குழுவிற்கு எதிர்க்கட்சி ஒருவரை நியமிக்காமல் ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவரை நியமித்து எமக்கு முன் செல்ல முடிந்திருக்கும்.

ஆனால் பிரதமர் அவ்வாறு செய்யவில்லை. திருடர்களை பிடிப்பதில் தீவிரமான மக்கள் விடுதலை முன்னணியை சேர்ந்தவருக்கே கோப் குழுவின் தலைமை பதவியை வழங்கினார்.

எனவே, 2019 ஆம் ஆண்டில் நடத்தப்படவுள்ள ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறும் நோக்குடனே கூட்டு எதிர்க்கட்சி இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. ரணில் விக்கிரமசிங்கவை அரசியலில் இருந்து நீக்கும் சதித்திட்டமாகும்.

அத்துடன், காணாமற்போனோர் விவகாரம் அலுவலகங்களை அமைத்துள்ளோம். இதற்காக உரிய வகையில் நிதி ஒதுக்கீடுகளையும் செய்துள்ளோம்.

அத்துடன் வடக்கின் பிரச்சினைகள் குறித்து துரித கதியில் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. இது தொடர்பாக இந்த ஆண்டு இறுதிக்குள் உரிய செயற்பாட்டு கட்டமைப்பை ஏற்படுத்து வோம் என்றும் அவர் தெரிவித்தார்.

# 'போதையிலிருந்து விடுபட்ட வன்னி' எனும் தொனிப்பொருளில் வவுனியாவில் போதை தவிர்ப்பு வேலைத்திட்டம் முன்னெடுப்பு!





வவுனியா, ஏப். 05

ஜனாதிபதியின் செயல்திட்டமான மது போதைத் தவிர்ப்பு வேலைத்திட்டம் இலங்கையில் முதல் முதலாக வவுனியாவில் வன்னிப் பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தின் ஏற்பாட்டில் நேற்று வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

'போதையிலிருந்து விடுபட்ட வன்னி' எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த நிகழ்வானது கல்லூரியின் அதிபர் தா. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

வவுனியாவிலுள்ள 37 பாடசாலைகளைச் சேர்ந்த சிங்களம், தமிழ் மற்றும் முஸ்லிம் மாணவர்கள் 420 பேர் போதைதவிர்ப்பு வேலைத்திட்ட நிகழ்வில் கலந்துகொண்டனர். போதைப் பொருள் பாவனை தொடர்பாக முறையிடுவதற்கு அல்லது தகவல்களைப் பொலிஸாருக்கு வழங்குவதற்கு ஒவ்வொரு பாடசாலையிலும் வைப்பதற்காக மாணவர்களிடம் முறைப்பாட்டுப் பெட்டிகள் பொலிஸாரால் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியலய மாணவிகளின் நடன நிகழ்வுகளும் நடைபெற்றிருந்தன.

மத்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் உதவி ஆய்வாளர் எஸ்.எம். பிரேமரத்தின வளவாளராக கலந்துகொண்டு மது போதை தவிர்ப்பு வேலைத் திட்டம் தொடர்பாக மாணவர்களுக்கு விளக்கமளித்திருந்தார்.

விருந்தினர்களாக வன்னி பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், பொலிஸ் அத்தியட்சகர் ரி.எம். எஸ். தென்னக்கோன், வவுனியா பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி மஹிந்த வில்வ ஆராட்சி ஆகியோர் கலந்து கொண்டனர்.

100

# நாடாளுமன்ற வளாகத்தில் நேற்றுப் பலத்த பாதுகாப்பு!

கொழும்பு, ஏப். 05

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் நேற்று இடம்பெற்ற நிலையில் நாடாளுமன்ற வளாகத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

கலகத்தடுப்புப் பிரிவினர் வரவழைக்கப்பட்டுள்ளமையுடன் மேலதிக பொலிஸ் அதிகாரிகளும் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டனர்.

# பூந்தோட்டம் மகாவித்தியாலய கட்டடத்திறப்பு விழா நேற்று



வவுனியா, ஏப். 05

வவுனியா பூந்தோட்டம் மகா வித்தியாலயக் கட்டடத்திறப்பு விழா நேற்று இடம்பெற்றது.

வவுனியா பூந்தோட்டம் மகாவித்தியாலயத்தின் நீண்ட காலப் பிரச்சினையாக இருந்த கட்டடப் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் நோக்குடன் வடமாகாண சபையின் நிதியொதுக்கீட்டின் கீழ் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடத் திறப்பு விழா அதிபர் திருமதி கி.நந்தபாலன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரனால் இந்தக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டமையுடன் மரக்கன்றுகளும் நட்டப்பட்டன. மேலும் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வும் இடம்பெற்றிருந்தன.

வவுனியா பூந்தோட்டம் மகாவித்தியாலயத்தின் நீண்ட காலப் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக அமைந்த இந் நிகழ்வில் வடமாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன், வவுனியா கோட்டக் கல்விப்பணிப்பாளர் எம்.பி.நடராஜா மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(க-100)

# நடமாடும் வியாபாரிகளினால் பாதசாரிகளுக்கு இடையூறு!

வவுனியா, ஏப். 05

வவுனியா நகரப் பகுதியில் நடைபாதை வியாபாரிகளால் பாதசாரிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

குறிப்பாக, வவுனியா - ஹொரவப்பொத்தானை வீதியில் பாதசாரிகளின் நடைபாதையில் வியாபார நடவடிக்கைகள் இடம்பெறுவதால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

அங்கு வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் நடைபாதையில் நடந்து செல்ல முடியாத வகையில் பொருள்களைப் பரப்பி வைத்து விற்பனையில் ஈடுபடுவதுடன் நடை பாதையில் நடந்து செல்லும் சமயத்தில் தம்மை பொருள்களை வாங்குமாறு வற்புறுத்துகின்றனர் எனவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.



இதே போன்று வவுனியா தர்மலிங்கம் வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் நகர சபையின் கட்டுப்பாட்டை மீறி வீதியில் பொருள்கள் வைத்து விற்பனை செய்யப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

(க-100)

# மஹிந்தவின் மனைவியை தண்டிக்கத் தவறியது அரசு

## ஜே.வி.பி. நேற்றுச் சாடல்

கொழும்பு, ஏப்.05

முன்னாள் முதல் பெண்மணியும் மஹிந்த ராஜபக்ஷ வின் துணைவி யுமான சிராந்தி ராஜபக் ஷவுக்கு எதிரான மோசடிக் குற்றச்சாட்டுக்கு நடவடிக்கை எடுக்க அரசு தவறி விட்டது என ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க நேற்று நாடாளுமன்றில் குற்றஞ்சாட்டினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம் பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம் பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஜே.வி.பி. ஆதரவளிக் கும். மஹிந்தவின் எதிர்கால அரசியலுக்குத் துணை போகும் வகையில் ஜே.வி.பி. இதனைச் செய்யவில்லை.

முக்கிய 3 காரணங்களுக் காகவே ஜே.வி.பி. இந்த முடி வுக்கு வந்தது. மத்திய வங்கிப் பிணை முறி மோசடி விவகாரம், கண்டி வன்முறைச் சம்பவம் மற்றும் கோப் குழு அறிக்கை ஆகியனவே அவை.

கண்டி மாவட்டத்தில் இன வன்முறை இடம்பெற்ற போது, சட்டம் ஒழுங்கு அமைச்சராகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே பதவி வகித்தார்.

மஹிந்த ஆதரவு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதேச சபை உறுப்பினர்களே திகண பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தினார்கள். அவர்கள் தண்டிக்கப்பட வில்லை.

முன்னாள் ஜனாதிபதியின் தலைமை அதிகாரி காமினி செனரத்தின் மோசடிக் குற்றச் சாட்டுகளுக்கு எதிராகத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.– என்றார். (ஐ)

# மருத்துவக் கண்காட்சி நேற்று ஆரம்பம்






யாழ்ப்பாணம், ஏப்.05

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நேற்று மருத்துவக் கண்காட்சி ஆரம்பமானது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் 40ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்த மருத்துவக் கண் காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முதல் எதிர்வரும் 7ஆம் திகதி வரை காலை 9 மணி முதல் பி.ப. 7 மணிவரை கண்காட்சி நடைபெற வுள்ளது.

அடிப்படை விஞ்ஞானம், மருத்துவத் துறையின் முன்னேற்றங்கள், நிகழ்காலச் சுகாதாரச் சவால்கள், சுகாதாரத் தொழில் வாய்ப்புக்கள், சிறுவர் ஆரோக் கியம், யௌவன பருவ ஆரோக்கியம், வயது வந்தோர் சுகாதாரம், முதியோர் சுகாதாரம் ஆகிய எட்டுத் தொனிப் பொருள்களில் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மருத்துவபீடமும், வடக்கு மாகாண சுகாதார அமைச்சும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்தக் கண்காட்சியைப் பார்வையிட்டு மக்கள் பயன் பெறவேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள் ளது. (ஐ–7)

# கையூட்டுப் பெற்ற குற்றத்துக்காக நீதிமன்றப் பதிவாளருக்குச் சிறை

கொழும்பு, ஏப்.05

அத்தாட்சிப்படுத்திய வழக்குக் கோவையை வழங்கு வதற்குக் கையூட்டல் பெற்ற குற்றத்துக்கு அம்பாறை மாவட்ட நீதிமன்றப் பதிவாளருக்கும் மற்றும் நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளருக்கும் 4 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துக் கொழும்பு மேல் நீதிமன் றம் நேற்று தீர்ப்பளித்தது.



அம்பாறை மாவட்ட நீதிமன்றால் வழங்கப்பட்ட வழக்குத் தீர்ப்பின் அத் தாட்சிப்படுத்திய பிரதியை வழங்கக் கையூட்டுப் பெற் றனர் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து நீதிமன்றப் பதிவாளருக்கும் மற்றும் நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளருக்கும் எதிராக லஞ்சம் மற்றும் மோசடி விசாரணை ஆணைக் குழுவால் கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத் திரிகை தாக்கல் செய்யப் பட்டது.

அதன் மீதான விளக் கம் கொழும்பு மேல்நீதி மன்ற நீதிபதி விகும் களு ஆராய்ச்சி முன்னிலை யில் இடம்பெற்று வந்தது.

எதிரிகள் இருவர் மீதான குற்றச்சாட்டுகளும் நியாய மான சந்தேகங்களுக்கப் பால் நிரூபிக்கப்பட்டுள் ளன. குற்றவாளிகளுக்கு 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படு கிறது.

நீதிமன்றப் பதிவாள ராகக் கடமையாற்றியவர் 6 ஆயிரம் ரூபா தண்டத் தையும் நீதிமன்ற முகா மைத்துவ உதவியாளரா கக் கடமையாற்றியவர் 3 ஆயிரம் ரூபா தண்டத் தையும் செலுத்தவேண் டும் என்று நீதிபதி தீர்ப் பளித்தார். (ஐ)


## நூல்கள் விற்பனைக்கு

### சேமமடு பதிப்பகம், பத்மம் பதிப்பகம்

2017 கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபை (EPAB) அங்கீகரித்த சுமார் 180 நூல்கள் (40 சிறுவர் நூல்கள்) போதிய ளவு கையிருப்பில் உள் ளன. மொத்தமாகவும் சில்லறையாக வும் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். இந்தியா தமிழ்மண் பதிப்பகத்தின் நூல்களும் கையிருப்பில் உள்ளன.

'சேமமடு புத்தகசாலை'
சேமமடு
Chemamadu Book Center, Publication
UG - 50, People's Park, Colombo - 11
Mob - 0777 - 345666, 071 - 2726778
Tel- 011 - 2331475, Fax - 2448624
Mail - chemamadu@yahoo.com








இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.04.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.